GOKULAM

ஆகஸ்ட் 2010 ◆ 80 பக்கங்கள் ◆ விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



◆ பார்க்க அழகு; பட்டால் விஷம்!

◆ சிற்ப நிலம்!

◆ நிறம் மாறும் ஸ்டோட்!

துளித் துளியாய்...

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1701


1702


1703


1704


1705


1706


1707


1708


1709


1710


1711


1712


1713


1714


1715


1716


1717


1718


1719


1720


1721


1722


1723


1724


1725

பெயர் மற்றும் விவரங்கள் உள்ளே...

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

ஆகஸ்ட் 2010 மலர் : 28 இதழ் : 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

பெருமையாய்க் கொண்டாடுவோம்!

அருமைக் குழந்தைகளே,

ஒவ்வொரு தேசமும் முக்கியத்துவம் அளிக்கும் நாளாக அமைவது சுதந்திர தினம் தான். ஒரு தேசத்தின் வளர்ச்சியும், சிறப்பும் சுதந்திரத்தாலேயே பெருமைக்குரியதாகின்றன.

இந்த மாதம் ஆறாம் தேதி 'ஜமைக்கா'வின் சுதந்திர தினம்; அதே நாளில்தான் 'பொலிவியா'வும் சுதந்திரம் அடைந்தது. இந்தியா ஆகஸ்ட் 15 அன்றும், ஆப்கானிஸ்தான் 19-ம் தேதியும் சுதந்திரம் பெற்றன. மலேசியாவின் சுதந்திர தினமும் இந்த மாதத்தில்தான் - ஆகஸ்ட் 31.

சுதந்திர தினம் என்பது வெறும் விடுமுறை நாளல்ல. அந்த நாள், நாம் வசிக்கும் நாடு எதுவாக இருந்தாலும், அந்த நாட்டுக்கு மரியாதை செலுத்தும் நாள்; கௌரவிக்கும் நாள். அந்த எண்ணத்தோடு, சுதந்திர தினத்தை நாம் அனைவருமே கொண்டாடுவோம். அதுதான், நாம் சுதந்திரம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளம்! உங்கள் பள்ளியில் சுதந்திர தின கொடியேற்ற நிகழ்ச்சி இருக்குமே... கட்டாயம் அதில் பங்கேற்றுக் கொள்ளுங்கள். பெருமிதம் உணர்வீர்கள்.

அன்புடன்
கோகூ



'அக்கக்கா' குருவியதன்
ஆலோலம் கேட்கிறது.
உருகவைக்கும் குரலாலே
உள்ளத்தை ஈர்க்கிறது!

சலிப்பேறும் நொடிகளுக்கு
சந்தோஷம் தருகிறது;
வலி, கவலை அனைத்தையுமே
வெளியேறச் செய்கிறது!

கேட்கவில்லை என்றாலும்
கோபமெதும் கொள்ளாது;
கேட்டு மனம் குளிர்ந்தாலும்
கர்வம் கொண்டு ஓடாது!

'பாடுவதே என்னுடைய
பணி' என்று சொல்கிறதா?
'வாடுவதை விட்டேநீ
வேலைசெய்' என்கிறதா?

- உதயன், சென்னை



அளவு மீறினால்...

கோடை மழை பெய்ததும்
குளிர்ந்து பூமி சிரித்தது
நடைபாதை முழுவதுமே
நீரில் மூழ்கிக் கிடந்தது.

'வெப்பம்' என்று அலறினோர்
உள்ளம் குளிரச் சிரித்தனர்;
கப்பல் விட்டுச் சிறுவர்கள்
குதூகலம் அடைந்தனர்!

மின்னல் வெட்டு, இடியுடன்
மடைதிறந்த வண்ணமாய்
நின்றிடாமல் பெய்தது
நெடுமழையும், நாளெலாம்!

பள்ளம் மேடு எதுவென
பார்த்தறியா வண்ணமாய்
வெள்ளமது ஓடுதே
வீதி ஓடையாச்சுதே!

மழை வேண்டும் என்றவர்
மனம் கலங்கி நிற்கிறார்.
மழை என்ன, அளவினில்
மிஞ்சும் எதுவும் துன்பமே!

– சின்னை வெங்கட்ராமன்,
திருச்சி



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

மரத்தின் உச்சிக் கிளையில் தொங்கிக் கொண்டிருக்கிறது அந்தத் தேன்கூடு.

ரீங்காரம் எழுப்பியபடியே அதைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன தேனீக்கள்.

எத்தனை தேனீ
உழைப்பில் எழுந்தது
இந்த
இனிக்கும் தேனடை....
இது,
எத்தனை மலர்கள்
கொடுத்த சீதனம்?

என்றொரு கவிதையுண்டு. ஒரு நாளில் நடந்துவிட்ட விஷயமல்ல அது.

ஆப்பிரிக்காவை தாயகமாகக் கொண்ட தேனீக்கள் இன்று அன்டார்டிக் தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. ஆரோக்கியமான ஒரு தேன் கூடு என்றால் அதில் 80,000 முதல் 1,00,000 தேனீக்கள் இருக்கும். சுமார் இரண்டு மில்லியன் மலர்களிலிருந்து குளுகோஸை சேமிக்க ஒரு லட்சம் கிலோ மீட்டர் வரை பயணிக்கின்றன தேனீக்கள். சரி; எதற்காக சேமிக்கின்றன?

மலர்கள் பூக்காத, உணவு உற்பத்திக்கு வழியில்லாத குளிர்காலத்தின் உணவுத் தேவைக்காக நடக்கிறது இந்த சேமிப்பு.

ராகவன்

அதேபோல, கொஞ்சமாகத் தேங்கி நிற்கும் குட்டையின் நீர், அதிகரித்து ஓடையாகி ஓடுகிறது. பல ஓடைகள் இப்படிக் கலப்பதால், சிற்றாறு. பல சிற்றாறுகளின் விளைவால் நதியாகப் பெருகுகிறது.. நதியில் ஓடுகிற நீர், குட்டையில்தானே தன்னுடைய பயணத்தைத் தொடங்கியது?

கரூருக்கு அருகில், மிகப் பெரியதாக அகன்று



துளித்

தென்படும் காவிரியைப் பார்க்கலாம். ஆனால், அது தோன்றும் இடமான தலைக்காவிரியில் போய்ப் பார்த்தால், ஆச்சர்யமாக இருக்கும். ஒரு ஆட்டுக்குட்டி தாண்டும் அகலம்தான்!

இன்று நாம் காண்கின்ற மிகப்பெரிய தொழிலகங்கள் எல்லாமே இப்படி சாதாரணமாக உருவானவைதான். இந்தச் சாதாரணத்தின் அடித்தளத்தில், கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அது, சேமிப்பு!

கீழே சிதறிக் கிடக்கும் ஒற்றைப் பருக்கை சோறையும் எறும்பு விட்டு வைப்பதில்லை. அதை உடனே

தன்னுடைய இருப்பிடத்துக்குக் கொண்டு சேர்க்கிறது.

நாளைக்கு உதவும் என்பதற்காக சேமிப்பது ஒருவிதம். இன்னொரு விதம், தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது. சேமிப்பால், இப்படி இரண்டுவகை லாபம் நமக்கு.

இன்னொரு வகையிலும் இரண்டு நன்மைகள் ஏற்படும். சேமிப்பின்போது, பெற்றோர்களின் உழைப்பும், சிரமமும் புரியும் என்பது ஒன்று. சேமிப்பதால், அவசரத்துக்கு அவர்களுக்கே உதவியாக இருக்கும் என்பது இன்னொன்று.

பெற்றோர்களின் முகத்தில் காணும் மகிழ்ச்சி, நமக்கு எவ்வளவு உற்சாகம் தருகிறது! 'சிறுதுளி பெருவெள்ளம்' என்று நாம் படித்திருக்கிறோம். மழைத் துளிகளின் தொகுப்புதான் வெள்ளமாகிப் பாய்கிறது. சிறுசேமிப்பும் இப்படித்தான். இதன் விளைவாக, எந்தப் பொருளையும் வீணாக்காத தன்மை பழக்கத்துக்கு வரும். சிக்கனம் பழகினால், சந்தோஷம் பெருகும் - நமக்குள்ளும், வீட்டிலும். பிறகென்ன? துளித்துளியாய் சேமிக்கலாம்தானே?!

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

துளியாய்...



ஜெய்சூர்யா, சினேகா

கோழி கூவியது.

நம் ஊர்க் கோழி இல்லை, நியூசிலாந்துக் கோழி. நன்கு பலமாகக் குரலெடுத்துக் கத்தி ஊரை எழுப்பிவிட்டது. எர்ன்ஸ்ட் எழுந்துவிட்டார். மளமளவென்று காலைக் கடன்களை முடித்துவிட்டு வயலுக்குப் புறப்பட்டார்.

'தம்பி, ஒரு வாய் சாப்டுட்டுப் போயேன்ப்பா.'


'இல்லைம்மா, நிறைய வேலை கெடக்கு, எல்லாத்தையும் முடிச்சுட்டுக் காலேஜுக்குப் போகறதுக்கு முன்னாடி வீட்டுக்கு வந்து சாப்பிடறேன்' பதிலுக்குக் காத்திருக்காமல் ஓட்டமாக விரைந்தார் எர்ன்ஸ்ட்.

அவர்களுடையது விவசாயக் குடும்பம். கொஞ்சம் விளைநிலங்கள் பண்ணை, ஆடு, மாடு, கோழி, அப்புறம் நிறையக் குழந்தைகள். இத்தனையையும் நிர்வகிப்பதற்குத் தனியே சம்பளம் கொடுத்து ஆள் வைக்கும் அளவு அவர்களுக்கு வசதி இல்லை. ஆகவே, சின்ன வயதிலிருந்தே எர்ன்ஸ்ட் கடின உழைப்புக்குப் பழகிவிட்டார்.




உருளைக்கிழங்கு!

என். சொக்கன்



* எர்னஸ்ட் ருதர்ஃபோர்ட்



மாடு மேய்ப்பது முதல் வயலில் விதைத்து அறுவடை செய்வது வரை எதையும் விட்டுவைக்கவில்லை, எதையும் அவமானமாகவும் நினைக்கவில்லை. அதேசமயம், வயல்வேலைகளைப்போலவே, படிப்பும் ரொம்பப் பிடித்திருந்தது. குறிப்பாக, இயற்பியல். ஆனால், அவரை மேற்படிப்புக்கு அனுப்பும் அளவுக்கு குடும்பத்தில் வசதி இல்லை.

எர்னஸ்டுக்கு யதார்த்தம் புரிந்தது. தமக்குத் தெரிந்த இடங்களில் உதவித்தொகைக்கு விண்ணப்பம் போட்டார். எப்படியாவது மேலே படிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துவிடாதா என்றும் ஏங்கினார்.

அப்போது எர்னஸ்டுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மணப்பெண் பெயர் மேரி. ஆனால், 'என்னோட எதிர் காலம் என்னன்னு எனக்கே நிச்சயமாத் தெரியலை, ஏதாவது ஒரு ஸ்காலர்ஷிப் கிடைக்கணும், மேலே படிக்கணும், இல்லாட்டி இங்கேயே ஒரு நிரந்தர வேலை, நல்ல வருமானத்துக்கு வழி பண்ணிக்கணும், அதுவரைக்கும் நீ காத்திருக்கணும்.'' என்று அந்தப் பெண்ணிடமே சொல்லிவிட்டார்.

மேரி சம்மதித்தார். அவர்களுடைய இரு குடும்பங்களும் நல்ல செய்தி வராதா என்று காத்திருந்தன.

அந்த வருடம், நியூசிலாந்தைச் சேர்ந்த ஒரு மாணவர் வெளிநாடு சென்று படிப்பதற்கான முழுச் செலவுகளையும் ஏற்கவிருப்பதாக, இங்கிலாந்து அமைப்பு ஒன்று அறிவித்தது.

உற்சாகமான எர்னஸ்ட், அந்த உதவித்தொகைக்கு விண்ணப்பம் போட்டார். சில வாரங்கள் கழித்து, பதில் வந்தது. 'மன்னிக்கவும், உங்களுக்குப் பதில் ஆக்லாந்தைச் சேர்ந்த இன்னொருவரைத் தேர்ந்தெடுத்துவிட்டோம்.'

எர்னஸ்ட் ஏமாற்றப் பெருமூச்சு விட்டார். உள்ளூரிலேயே ஓர் ஆசிரியர்

வேலை பார்த்துக்கொண்டு, விவசாயத்தைக் கவனிக்க ஆரம்பித்தார்.

அந்த நேரத்தில், சற்றும் எதிர்பாராத ஒரு திருப்புமுனை. எர்ன்ஸ்டுக்குப் பதிலாக இங்கிலாந்து சென்று படிக்கத் தேர்வான ஆக்லாந்து மாணவர், திடீரென்று விலகிக்கொண்டார்.

தமக்குத் திருமணம் நடக்கப் போவதாகவும், உள்ளூரில் நல்ல வேலை கிடைத்துவிட்டதாலும், மேலே படிக்கவில்லை என்று சொன்னார் அவர்.

கடுப்பான நிர்வாகிகள், எர்ன்ஸ்டுக்குத் தந்தி அனுப்பினார்கள், 'வாழ்த்துகள், நீங்கள் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்காகச் செல்லத் தேர்வு செய்யப்படுகிறீர்கள். அங்கே உங்களுடைய செலவுகள் அனைத்தையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். சீக்கிரமாகக் கப்பல் பிடித்து வந்து சேருங்கள்!'



அந்தத் தந்தி வந்தபோது, எர்ன்ஸ்ட் வயலில் விளைந்த உருளைக் கிழங்குகளைத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தார்.

தந்தியைத் தூக்கிக்கொண்டு வயலுக்கு ஓடி வந்த அம்மா மார்த்தா, மகனிடம் சொன்னார். எர்ன்ஸ்ட் மெல்லச் சிரித்தார், தன் கையிலிருந்த கிழங்கைக் கூடையில் போட்டார்,

'இதுதான், நான் தோண்டப்போகும் கடைசி உருளைக்கிழங்கு' என்றார் உற்சாகமாக.

அப்போதைய நிலைமையில், எர்ன்ஸ்ட் இங்கிலாந்து செல்வதற்குக் கப்பல் செலவுக்குக்கூட அவர்களிடம் பணம் இல்லை. கடன் வாங்கிச் சமாளித்தார்கள். மிகுந்த பரவசத்தோடு மேற்படிப்புக்காகக் கிளம்பினார் அவர்.

இந்தத் திருப்பம் மட்டும் நிகழாவிட்டால், விவசாய வேலைகளில் முடங்கிப்போயிருக்க வேண்டியவர் இங்கிலாந்தில் மிகப் பிரமாதமாகப் படித்தார். அணு அறிவியல் சம்பந்தமான பல ஆராய்ச்சிகளை நிகழ்த்தி உலகப் புகழ் பெற்றார். 1908ம் ஆண்டு நோபல் பரிசு வென்ற அவர், எர்ன்ஸ்ட் ரூதர்ஃபோர்ட்!

பலருக்குத் தெரியாத விஷயம், ரூதர்ஃபோர்ட் ஓர் அற்புதமான ஆராய்ச்சியாளர் மட்டுமில்லை, அருமையான ஆசிரியர், வழிகாட்டியும் கூட!

இதற்கு சாட்சியாக, அவருடைய சீடர்கள், அவரது மேற்பார்வையில் ஆய்வுகளைச் செய்தவர்கள் 11 பேர் (இயற்பியலில் 3 பேர், வேதியியலில் 8 பேர்) நோபல் பரிசு வென்றிருக்கிறார்கள்!

மேற்படிப்பு என்பது, வெறும் வேலைக்கான வாய்ப்புதான் என்று எண்ணிய அந்த ஆக்லாந்து இளைஞரை, யாருக்கும் தெரியாது. ஆனால், கையில் உள்ள வேலை, திருமண வாய்ப்பையெல்லாம் ஒதுக்கிவிட்டு மேலே படிக்கக் காத்திருந்த ரூதர்ஃபோர்ட், அணு இயலின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

வயலோ, அறிவியலோ, நாம் விதைப்பதுதானே முளைக்கும்? ●

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

நினைவுச் சிறுகதைப் போட்டி 2010



மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-

முதல் பரிசு	ரூ.1000/-
இரண்டாம் பரிசு	ரூ.500/-
மூன்றாம் பரிசு	ரூ.500/-

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :

* **இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாகப் படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.**
* கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். **உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழிக் கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.**
* பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!
* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும்வரை வேறு இதழ்களுக்கு அனுப்பக்கூடாது.
* போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

முடிவுத் தேதி : 31.8.2010

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032





• சுகன்யா



• ஜெய்பிரியா




• ஜா.மீனா

மாரியம்மாள் பெண்கள் மே.நி. பள்ளி

முதல்வர் : 'பறக்க முடியும்' என்ற மனித நம்பிக்கைதான் விமானமாக வெளிப்பட்டது. ஆனால், அது வெற்றியடைந்தது என்றால், பல தோல்விகள் எதிர்ப்பட்டபோதும், தளராமல் ஆய்வைத் தொடர்ந்த விடா முயற்சியால்தான்! ஆக, வெற்றிக்குப் பெரிதும் காரணம் எது என்று அறிய - மாணவிகளின் பேச்சைக் கேட்க, நானும் காத்திருக்கிறேன்.

தமிழ்த்துறைத் தலைவர் சிவகாம சுந்தரியை நடுவராகக் கொண்டு, இப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற பட்டிமன்றத்தின் சுருக்கம்:

கே.வைஷ்ணவி : மரத்துக்கு ஆணிவேர் எவ்வளவு அவசியமோ, அந்த மாதிரி மனிதனுக்கு தன்னம்பிக்கை. ஒலிம்பிக் தடகளத்தில் பி.டி.உஷா தங்கம் வென்றது தன்னம்பிக்கையால்



• சின்னசாமி

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ளது மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி. அருகில் உள்ள கிராமப் பகுதிகளில் வசிக்கும் எளிய, விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள் இங்கே பயில்கிறார்கள். மிகக் குறைந்த கல்விக் கட்டணம் மட்டுமல்ல; பாடத்துடன், ஒழுக்கம்,

வெற்றி விளைச்சல்!





✽ கே.பிருந்தா



✽ கே.வைஷ்ணவி



✽ ப.தெய்வநாயகி

தான். இரண்டாம் உலகப் போரில் பேரழிவைச் சந்தித்த ஜப்பானின் இன்றைய அபரிமிதமான வளர்ச்சிக்கு அடித்தளமும் அதேதான்.

ப.தெய்வநாயகி : காலங்காலமாகக் கேட்ட முயல்-ஆமை ஓட்டப் பந்தயக் கதையோட நீதி என்ன? விடாமுயற்சி இருந்தா நிச்சயம் ஜெயிக்கலாம். ராபின்சன் குரூசோ கதை என்ன? விடாமுயற்சிதான் வெற்றிதரும். இவ்வளவு வேணாம். கஜினி முகமது பற்றிய வரலாறு என்ன? பதினேழாவது முறை படையெடுப்பில் வெற்றி கண்டான். ஆக விடாமுயற்சி எப்பவும் வெற்றிதான் தரும்.

ச.சரண்யா : என்ன சாமர்த்தியம்? பதினாறு முறை தோற்றும், தன்னம்பிக்கையை கஜினி முகமது இழக்கவில்லை. ஆக, அங்கே அடிப்படை தன்னம்பிக்கை. மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்த ஆபிரகாம் லிங்கனும், ஸ்டாலினும் உலகில் அறியப்பட்ட பெரிய தலைவர்கள். தன்னம்பிக்கைதான், அவர்களை அந்த அளவுக்கு உயர்த்தியது.

உடற்பயிற்சி, மன ஊக்கத்துக்கான தியானம், போட்டிகளில் பங்கேற்கும் முனைப்பு, நம் ஆன்மிக கலாசாரம் ஆகியவையும் மாணவிகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

அனுபவம் மிக்க ஆசிரியர்கள், மஞ்சுளாதேவி, சொர்ணமணி ஆகிய முதல்வர்கள், நிர்வாக அதிகாரி சின்னசாமியின் வழிகாட்டல்... என்று சிறப்புடன் நடைபெறுகிறது, தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் மனைவி பெயரில் இயங்கி வரும் மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி.



* எம்.கிருஷ்ணவேணி



* ஆர்.கீதா



* ஆர்.கோகிலப்ரியா

சுகன்யா : 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்' என்றார் வள்ளுவர். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்றாள் அளவை. ஆணி வேர் மாதிரி நம்பிக்கை இருக்கலாம். ஆனால், அந்த வேரிலுள்ள துளை வழியாக, மரத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் நீரைக் கொண்டு சேர்த்தால்தான் மரம் தழைக்கும். இடைவிடாது நடக்கின்ற அந்த நிகழ்வுதான் விடாமுயற்சி!

ஆர்.கோகிலப்ப்ரியா: தன்னம்பிக்கை இல்லாத முயற்சி சாத்தியமில்லை; மின்சாரத்தால் எரியக்கூடிய குண்டு பல்பை, எடிசன் கண்டுபிடித்தார். ஆனால், அதில் ஒளிரும் பொருளான டங்ஸ்டனை பயன்படுத்துவதற்குமுன், பல நூறு முறை தோல்வியுற்றார். பின்பொருமுறை அவரிடம் கேட்டார்கள். ''அப்படியானால், அவ்வளவு முறை தோற்றீர்களா?'' எடிசன் சொன்னார்: 'தோற்கவில்லையே; இத்தனை பொருட்களுக்கு ஒளிரும் தன்மையில்லை' என்றல்லவா கண்டுபிடித்திருக்கிறேன்''. இதுதான் தன்னம்பிக்கை!

கே.பிருந்தா : குழந்தைப் பருவத்தில் இருந்து கவனித்துப் பார்த்தால், விடா முயற்சியே நம்மை வளர்த்திருப்பது புரியும். கீழே விழுந்து, எழுந்து, குழந்தை நடக்கும்; கம்பியைப் பிடித்து ஏறும்; குட்டிக் கரணம் அடிக்கும்; தாவும்; ஓடும். இதெல்லாம் என்ன? புதுசு, புதுசா ஒவ்வொரு விஷயமா முயற்சி செய்கிறது குழந்தை. அதன் விளைவுதான், வளர்ச்சி! ஆக, விடா முயற்சிதான் எல்லாமே!

நித்யபாரதி : 'பொழுது விடியும் முன் எழுந்து, தினமும் நாலு சொட்டு தன்னம்பிக்கையை அருந்து. நீ 'நன்னம்பிக்கை முனை வரை நடந்தே போகலாம்' என்றார் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார். 'வெற்றியாளனாக விளங்க வேண்டும் என்றால், முதலில் தன்னம்பிக்கை உடையவனாக ஆக வேண்டும்' என்கிறார் கிரிக்கெட் ஜாம்பவானான சச்சின் டெண்டுல்கர்.



* டி.மஞ்சுளாதேவி

ஆர்.கீதா : தன்னம்பிக்கை முயற்சியைத் தரலாம். ஆனா விடாமுயற்சியை அது தராது. விவசாயத்துல முயற்சின்னு சொன்னா, நாத்து பாவறது. அதுமட்டும் போதுமா? களை எடுக்கணும்; தண்ணி பாய்ச்சணும்; மருந்து அடிக்கணும்... இப்படி அடுத்தடுத்து பல வேலைகள் உண்டு. இதான் விடாமுயற்சி! அதனால்தான் வள்ளுவர் சொன்னார்: *'தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை வாளாண்மை போலக் கெடும்.'*

எஸ்.சரண்யா : உலகமே வியக்கத் தக்க தகவல்களை பூமிக்கு அனுப்பியது 'சந்திரயான்' விண்கலம். அந்த முயற்சியை வெற்றிகரமாக்கியது கள்ளக்குறிச்சி அருகிலுள்ள சிறு கிராமத்தைச் சேர்ந்த 'அண்ணாத்துரை'யின் நம்பிக்கை. 'ராமன் கட்டாயம் வந்து சிறை மீட்பான்' என்பது சீதையின் நம்பிக்கை. 'சீதை காத்திருப்பாள்' என்றது ராமனின் நம்பிக்கை. அவ்வளவு சக்தி வாய்ந்த மூலிகை அது.

ஜா.மீனா : தன்னம்பிக்கை அதிகமானா தோல்விகூட வரும். 'Over confidence leads to failure' என்று சொல்வார்கள். ஆனால், விடா முயற்சி வெற்றியை மட்டுமே தரும். அதனால்தான் வள்ளுவர் சொன்னார்.



சொர்ணமணி

'ஊழையும் உப்பக்கம் காண்பர்; உலைவின்றி தாழாது உஞற்று பவர்.'

எம்.கிருஷ்ணவேணி : முளைக்கும் என்று நம்பித்தான் விதைக்கிறோம்; படிப்போம் என்று நம்பித்தான் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். முடியும் என்கிற நம்பிக்கையில்தான், செயல் பிறக்கிறது. இதுதான் எல்லா நிலையிலும், எல்லாத் துறையிலும் அடிப்படை!

ஜெய்பிரியா : கார்ல் மார்க்ஸின் மூலதனம் என்கிற நூல் பல ஆண்டு முயற்சிகளின் வெளிப்பாடு. இன்று நாம் காணும் வளர்ச்சிகள் அனைத்தும் பல ஆண்டு ஆராய்ச்சியின் பயன். எல்லாத் துறையிலும் சாதனையாளர்களைக் கவனித்தால், அவர்கள் வரலாறு விடாமுயற்சியாகத்தான் இருக்கும்.

நடுவர் : 'தன்னம்பிக்கை இல்லாதவன், கத்தரிக்கோல் இல்லாத தையல்காரன்' என்றார் பெர்னார்ட்ஷா, உண்மையும் இதுதான். எந்த ஒரு விஷயத்திலும் அடித்தளமாக, அடி நீரோட்டமாக இருப்பது தன்னம்பிக்கைதான். அதைத் தொலைத்துவிட்டால், எந்த வகையிலும் வளர்ச்சி இல்லை. எனவே, அதை மறுக்கவே முடியாது.

அது மட்டும் போதுமா என்றால், போதாது. விடாமுயற்சி கட்டாயம் வேண்டும். ஒரு கிளை வெட்டப்பட்டால், அதனருகே இன்னொரு குருத்தை வெளிப்படுத்துகிறது மரம்; தன் இயக்கத்தை நிறுத்துவதில்லை. இதுதான் விடாமுயற்சி!

திருச்சிக்குப் போகிறோம் என்று முடிவெடுப்பது தன்னம்பிக்கை. ஆனால், சென்றடைவது விடாமுயற்சி! நினைப்பு தன்னம்பிக்கை; செயல் விடாமுயற்சி; நிலம் தன்னம்பிக்கை; விளைச்சல் விடாமுயற்சி; ஆக, வெற்றிக்குப் பெரிதும் காரணம் விடாமுயற்சியே!



நித்யபாரதி



எஸ்.சரண்யா



ச.சரண்யா

தொகுப்பு, படங்கள் : **பாலா**

தலைமுடி அடர்த்தியாகவும் கருகரு வென்றும் இருந்தால் அது எல்லோருக் கும் பிடிக்கும். இல்லையா? ஒரு வருடைய அழகு, தோற்றம் ஆகிய வற்றை நிர்ணயிப்பதில் தலைமுடியின் பங்கு மிக முக்கியமானது. இன்று பெரும்பாலான குழந்தைகளுக்கும் இளம் வயதினருக்கும் முடி உதிருதல் ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது.



தலைமுடி உதிர்வது ஏன்?

முடி உதிர்வதற்குப் பல காரணங்கள் உண்டு. சுத்தமாகப் பராமரிக்கத் தவறி னால் தலைமுடி உதிரும்; உணவில் சரியான அளவில் ஊட்டச்சத்துகள் இல்லாமல் போனால் உதிரும். இவை தவிர, ஹார்மோன் குறைபாடுகள், உட லைத் தாக்கும் நோய்கள், தோல் நோய்கள், பரம்பரை, மன அழுத்தம், பிற நோய்களுக்குத் தரப்படும் மருந்து கள், உணவில் சேர்க்கப்படும் செயற்கை வேதிப்பொருள்கள், முதுமை, ஒவ் வாமை போன்ற பல காரணங்களால் தலைமுடி உதிரலாம். காரணம் தெரிந்து சிகிச்சை பெற்றால், இதைத் தடுக்கவும் முடியும்.

கேசம் காக்கும்

உணவில் கவனம்!

குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறை பாடுதான் முக்கியக் காரணமாக உள்ளது. குறிப்பாக, புரதச் சத்து, இரும்புச் சத்து, தாமிரம், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் ஆகிய சத்துகளில் ஒன்று குறைந்தாலும் தலைமுடி உதிரத்தொடங்கிவிடும்.

புரத உணவுகளை நாடுங்கள்:

பால், பருப்பு, தயிர், நெய், வெண் ணெய், மீன், இறைச்சி, பாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு, முந்திரிப் பருப்பு, பட்டாணி, வேர்க்கடலை, பீன்ஸ், சோயாபீன்ஸ் ஆகியவற்றை அடிக்கடி உணவாகக் கொண்டால் உடலுக்குத் தேவையான புரதச்சத்து கிடைத்துவிடும். இதனால் கேசம் கருகருவென நன்றாக வளரும்; அடர்த்தியாகவும், கனமாகவும் வளரும்.

இரத்த சோகை உள்ளதா?

தலைமுடி கொத்துக் கொத்தாக உதிர்ந்

தால் மருத்துவரின் யோசனைப்படி இரத்தத்தில் 'ஹீமோகுளோபின்' அளவைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இந்த அளவு பொதுவாக 13 கிராமுக்கு மேல் 14.5 கிராம் வரை இருக்க வேண்டும். பத்து கிராமுக்குக் கீழே இருந்தால் 'இரத்த சோகை' உள்ளது என்று பொருள். இதற்கு இரும்புச் சத்து மாத்திரைகள் சாப்பிட வேண்டும்.

உணவுகள்!

அத்துடன் இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரும்புச்சத்து உணவுகள்

எல்லாக் கீரைகளிலும் இரும்புச் சத்து உள்ளது. அவற்றில் பசலைக்கீரையும் முருங்கைக்கீரையும் முக்கியமானவை. சுண்டக்காய் குழம்பு வாரம் இருமுறை சாப்பிடலாம். முட்டையின் மஞ்சள்கரு, கல்லீரல், கோழிக்கறி அசைவ உணவில் முக்கியமானவை. தினமும் தேனில் ஊறவைத்த பேரீச்சை, கடலை மிட்டாய், உலர்ந்த திராட்சை சாப்பிட்டு வந்தால் முடி உதிர்வது நிற்கும்.

தாமிரமும் துத்தநாகமும் அவசியம்!

கேசத்தின் வளர்ச்சிக்குத் தாமிரச்சத்தும் துத்தநாகச் சத்தும் மிக அவசியம். எல்லாப் பருப்பு வகைகளிலும் உலர்ந்த

டாக்டர் கு. கணேசன்

கொட்டை வகைகளிலும் இச்சத்துகள் அதிகம் உண்டு. மேலும் கடல் நண்டு, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகிய வற்றிலும் இவை அதிகம். வாரம் ஒருமுறையாவது இந்த உணவுகளில் ஒன்றைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

வைட்டமின் சி உதவும்!

வைட்டமின் சி சத்து முடியின் வேர்ப்



பகுதியை வலுவாக்க உதவுகிறது. எலுமிச்சைச்சாறு, ஆரஞ்சுச்சாறு, சாத்துக்குடி பழச்சாறு, அன்னாசி, பப்பாளி, காலிஃபிளவர், முட்டைக்கோஸ் முதலியவற்றில் வைட்டமின் சி அதிகமுள்ளது.

முடி காக்கும் அயோடின்

அயோடின் சத்து தலையிலுள்ள தோலுக்கு இரத்தம் செல்வதை அதிகப்

படுத்துகின்றது. இதனால் தலைமுடி நன்கு ஊன்றி நிற்கும். அயோடின் குறைந்தால் முடி உதிரும். இதனைத் தவிர்க்க, அயோடின் கலந்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பயாட்டின் தெரியுமா?

எல்லா வகை வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் சத்துகளும் தலைமுடி வளர்ச்சிக்கு அவசியமே! என்றாலும் அவற்றில் 'பயாட்டின்' மற்றும் 'அயனோசிட்டால்' சத்துகள்தான் தலைமுடி வளர்ச்சிக்கு மிக மிக அவசியம். கைக்குத்தல் அரிசி, பார்லி, ஓட்ஸ், காளான், காலிஃபிளவர், முளைவிட்ட தானியங்கள், முட்டைக்கோஸ், முள்ளங்கி ஆகிய உணவுகளில் இந்தச் சத்துகள் அதிக அளவில் உள்ளன. இவற்றையும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சுத்தம் பேணுங்கள்!

உணவோடு தலைமுடியைப் பராமரிப்பதும் முக்கியம்தான். இதற்குத் தினமும் தலைக்குக் குளிப்பது நல்லது. இயலாதவர்கள் வாரம் இருமுறையேனும் தலைக்குக் குளிக்க வேண்டும். தரமான ஷாம்பு தேய்த்துக் குளிக்கலாம். தலையில் உள்ள அழுக்கு மற்றும் எண்ணெய்ப் பிசுக்கை அகற்ற ஷாம்பு உதவும். தலைக்குக் குளித்துவிட்டு, ஈரம் உலரும் முன்பே தலை வாருவது தலைமுடி உதிர முக்கியக் காரணம். தலையில் ஈரம் உலரும் வரை காத்திருக்க விரும்பாதவர்கள் 'டிரையர்' கொண்டு தலைமுடியை உலர வைக்கலாம்.

தவறான முறையில் தலை வாருவதால்கூட தலைமுடி உதிர வாய்ப்புண்டு. அதனைத் தவிர்க்க அகலமான சீப்பை உபயோகிக்கலாம். கூரான முனைகள் கொண்ட சீப்பைத் தவிர்ப்பதும் நல்லது. இவை தவிர, பொடுகு, பேன், பூஞ்சை நோய்கள் போன்றவை தலையைத் தாக்காமல் பாதுகாக்க வேண்டியதும் முக்கியம்.

வாழ்த்துகள்!



பெயரைச் சொல்; பரிசை வெல்-3-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை, குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.கொமாடோ டிராகன் 2.பெங்குவின் 3. பத்ரிநாத்

பரிசு பெறுவோர் :

1) ரெஜிராதேம்பாவன், கழுகுமலை 2) பி.ராகசுதா, தஞ்சாவூர் 3) அக்ஷத் கிருஷ்ணா, ஓசூர் 4) எம்.முகமது அமீர், உளுந்தூர்பேட்டை 5) எம்.பாண்டித்துரை, போடி 6) பி.அமலகாவ்யா, திருநெல்வேலி 7) என்.எஸ்.பத்ரிநாத், நாகை 8) ஆர்.பூஜாஸ்ரீ, சென்னை 9) ஜி.செல்வினா, மும்பை 10) ஆர்.கே.உத்தம் ஸ்ரீராம், பொள்ளாச்சி



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032



ஏழு கோடுகள்;





அடுக்குகளாகக் கட்டப்பட்ட உயர்ந்த கோபுர வடிவில் உள்ள புத்தமதக் கோயில்களே பகோடா (pagoda) எனப்படும். ஒற்றைப் படை அடுக்குகளாக இருப்பது அதிர்ஷ்டத்தை அளிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், பகோடாக்கள் ஒற்றைப் படையில் அடுக்குகளைக் கொண்டு அமைந்துள்ளன.

அநேகப் பகோடாக்கள் கோயில்களாகவோ அல்லது கோயிலைச் சேர்ந்த இடமாகவோ அமைந்துள்ளன. இந்த அமைப்பு முறை, முதன்முதலில் இந்தியாவில்தான் உருவானது. பின்னர் ஆசியாவிற்கும், உலகின் மற்ற பாகங்களுக்கும் பரவியது. இந்தியா, சீனா, ஜப்பான், இலங்கை, தாய்லாந்து போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இவ்விதக் கோயில்கள்

நூறு ஸ்தூபிகள்!



உள்ளன.

பர்மாவின் தலைநகரான ரங்கூனில் உள்ள ஷ்வேடிகோன் பகோடா (Shwedegon Pagoda) என்ற புத்தர் கோயில்தான், உலகத்திலேயே மிக உயரமானது. இது ஒரு மலை மீது கட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 97.9 மீட்டர். புத்தர் மறைந்த பிறகு அவருடைய கூந்தலை வைக்க இது கட்டப்பட்டது என்கிறார்கள். இது பல்வேறு காலங்களில் படிப்படியாக விரிவுப்படுத்தப்பட்டது.

இதன் வாயிலில் மிகப் பெரிய சிங்கங்கள் காவல் காக்கின்றன. அவற்றுக்குப் பின்னே பல்வேறு விலங்குகள் உட்பட மிகப் பெரிய உருவங்கள் சிற்பங்களாகத் துலங்குகின்றன.

இங்குள்ள ஒவ்வோர் அமைப்பும் ஒவ்வொரு விதமான வேலைப்பாடு கொண்டது. பெரிய மேடையைச் சுற்றித் தங்கத்தாலான சிறு நூறு ஸ்தூபிகள் உள்ளன. இவை புத்தரின் போதனைகளைப் பின்பற்றிய முதன்மையான சீடர்களைக் குறிக்கின்றன என்கிறார்கள். ஒவ்வொரு ஸ்தூபியின் கீழ்ப் பகுதியிலும் ஏழு கோடுகள் காணப்படுகின்றன. இவை புத்தரின் உடையில் உள்ள ஏழு மடிப்புகளைக் குறிப்பன என்கிறார்கள்.

சீனாவில் உள்ள பகோடாக்களில், ஒவ்வோர் அடுக்கிலும் தாழ்வாரங்கள் போன்ற அமைப்பு உண்டு. இவற்றில் சிறுசிறு மணிகளைக் கட்டித் தொங்க விட்டு இருக்கிறார்கள். இவை காற்றில் அசைந்து ஒலித்துக் கொண்டு இருக்கும். இப்பகோடாக்கள் கற்களாலும் பளபளப்பான ஓடுகளாலும், பீங்கான்களாலும் கட்டப்பட்டவை.

ஜப்பானில் உள்ள பகோடாக்களும் சீனாவில் உள்ளதைப் போன்றே அமைந்துள்ளன. சிற்சில இடங்களில் மரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

பகோடாக்கள் பெரும்பாலும் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றன. பார்ப்பதற்கு நீண்ட புனல் ஒன்றைக் கவிழ்த்து வைத்தது போல இவை காட்சியளிக்கின்றன!

- எஸ்.தணிகைவேல்,
பன்னிரண்டாம் வகுப்பு,
உ. எண் 762, காஞ்சிபுரம்

விவேகம்

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராய் இருந்த சமயம், ஒருநாள் நாடாளுமன்றத்தில் அவரைக் கேலி செய்ய நினைத்த உறுப்பினர் ஒருவர் சொன்னார். ''மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! நான் அணிந்திருக்கும் காலணி, தங்கள் தந்தையார் தயாரித்துக் கொடுத்தது.'' அதைக் கேட்ட மற்ற உறுப்பினர்கள் நகைத்தார்கள். ஆனால், லிங்கன் சற்றும் கலங்கவில்லை. நிதானமாகவே சொன்னார். ''என் தந்தை எவ்வளவு அக்கறையாகவும், நேர்த்தியாகவும் தம் தொழிலைச் செய்தார் என்பதற்கு, மரியாதைக்குரிய உறுப்பினர் வார்த்தைகளே சாட்சி. இன்னும் சிலரும் என் தந்தையார் தைத்த காலணிகளை அணிந்திருக்கலாம். அவற்றில் ஏதும் பழுதிருந்தால் என்னிடம் கொடுங்கள். நான் சரி செய்து தருகிறேன். என் தந்தையைப் போல, நானும் நேர்மையாகவே தொழிலைச் செய்வேன்.'' அதைக் கேட்ட அவையினர் வாயடைத்துப் போயினர். கேலி செய்ய முற்பட்டவர், வெட்கித் தலைகுனிந்தார்.


சமாளிப்பு

சர். ஆர்தர் கானன் டாயில் (Sir. Arthur Conan Doyle) புகழ்பெற்ற எழுத்தாளர்; ஷெர்லக் ஹோம்ஸ் கதைகளை எழுதியவர். அவர், ஆவிகளுடன் பேச முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர். அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் திடீரென இறந்துவிட்டார். சில நாட்கள் கழித்து டாயிலைச் சந்திக்க வந்த வாசகர் ஒருவர் கேட்டார். ''இறந்து போன நண்பர் உங்களிடம் பேசினாரா?''

சாதுர்யம்

முகலாயச் சக்கரவர்த்தி ஜஹாங்கீர், தம் மனைவி நூர்ஜஹானிடம் பேரன்பு கொண்டவர். அதற்கு, நூர்ஜஹானின் கூர்மையான மதிநுட்பமும் காரணம். ஒருமுறை





''இல்லை'' என்றார் டாயில்.

''அப்படியானால் உங்கள் நம்பிக்கை பொய் தானே?'' என்றார் வந்தவர். உடனே டாயில் சொன்னார்:

''இல்லை. இனி பேசுவார் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் அவர் இறக்கும் முன் எங்களுக்குள் சண்டை ஏற்பட்டது. அதன் பிறகு நாங்கள் பேசிக்கொள்வதில்லை.'' அதைக் கேட்டு, வந்தவர் வியந்து போனார்.

ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி



அவரிடம் ஜஹாங்கீர் கேட்டார். ''பேகம், இளமையில் நெஞ்சு நிமிர்த்தி காளைபோல் நடப்பவர்கள், முதுமை அடைந்ததும் கூன் விழுந்து, பூமியைப் பார்த்தபடி நடக்கிறார்களே, அது ஏன்?''

உடனே நூர்ஜஹான் சொன்னார், ''வேறொன்றுமில்லை சக்கரவர்த்தி. இதுவரை தாங்கள் இழந்த நாட்கள், பூமியில் எங்கேனும் புதையுண்டு இருக்குமோ என்று தேடித்தான் அவ்விதம் நடக்கிறார்கள்.''

அதைக் கேட்ட ஜஹாங்கீர் ''பலே பலே'' என்று வியந்து பாராட்டினார்.

* தென் அமெரிக்கா, சிலி, வடக்கு அர்ஜெண்டைனா, பொலிவியா, தெற்கு பெரு ஆகிய பகுதிகளில் காணப்படும் விலங்கு ஆல்பாக்கா (alpaca). ஒட்டகக் குடும்பத்தைச் சேர்ந்த இதை, அடர்த்தியான இதன் ரோமத்துக்காகவே வளர்க்கிறார்கள். இதன் ரோமத்தில் இருந்து தயாரிக்கப்படும் ஆடைகள், நீண்ட நாட்களுக்கு பயன்படுத்த ஏற்றவையாக இருக்கின்றன. புல், பாசி இவற்றை உணவாகக் கொள்ளும் ஆல்பாக்காவின் ரோமம், கறுப்பு, வெள்ளை, பழுப்பு ஆகிய நிறங்களில் காணப்படும்.





* ஆஸ்திரேலியா மற்றும் நியூ கினியைத் தாயகமாகக் கொண்ட முள் எறும்புத்தின்னி இசிட்னா (echidna). முள்ளம்பன்றியைப் போலவே, இதன் முதுகிலும் கறுப்பு

* குட்டை வால் வீசல் (short tailed weasel), ஸ்டோட் (stoat) என்றெல்லாம் சொல்லப்படும் விலங்கு எர்மைன் (ermine). வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா உள்ளிட்ட பகுதிகளில், குளிர் மிகுந்த புதர்க்காடுகளில் வசிக்கும்



* கீரி குடும்பத்தைச் சேர்ந்தது சூரிகேட் (suricate). தென் ஆப்பிரிக்காவில், கேப் (cape) மாநிலத்தில் இதை அதிகம் காணலாம். கூட்டமாக வாழும் இயல்புடைய இது, உலர்ந்த புல்வெளியில் வளை தோண்டி வாழும். தனது வாலையும், பின்கால்களையும் ஊன்றி, முன்கால்களை மடித்து வைத்தபடி இது வெயிலில் நிற்கும்போது, சூரிய நமஸ்காரம் செய்வது போலத் தோன்றும். நச்சுப் பாம்புகளையும் எதிர்த்துத் தாக்கும் துணிவு இதற்குண்டு. இதை மீர்கட் (meerkat) என்றும் சொல்வார்கள்.

-எஸ்.தணிகைவேல், உ.எண். 762, காஞ்சிபுரம்.




முனை கொண்ட, கூர்மையான முட்கள் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. குட்டையான கால்கள், சிறிய வால் ஆகியவற்றைக் கொண்ட இசிட்னாவின் வாய்ப்பகுதி, பறவையின் அலகு போல முன்புறம் நீண்டிருக்கிறது. இரவில் இரைதேடும் இதன் உணவு கரையான்கள், எறும்புகள், பூச்சிகள் முதலியவைதான். முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, பாலூட்டுகின்ற விந்தையான விலங்கு இது!

- ம. விவேக், குட்டம்.




பாலூட்டிகள்

✸ ஆல்பக்காவைப் போன்று, அதே பகுதியில் காணப்படும் மற்றொரு விலங்கு, இலாமா (llama). இதுவும் ஒட்டக இனத்தைச் சேர்ந்ததுதான். ஆனால், ஒட்டகத்துக்கான திமிலோ, உயரமோ இதற்கில்லை. 1.5 மீட்டர் உயரமும், சுமார் 180 கிலோ வரை எடையும் கொண்டிருக்கும். இதன் கால்களில் இரண்டு 'விரல்களே' இருக்கும். சராசரி ஆயுட்காலம் பத்து ஆண்டுகள். அதிகச் சுமையை ஏற்றினாலோ அல்லது களைப்படைந்தாலோ, இது கீழே படுத்துவிடும். அதன் பிறகு இருந்த இடத்தை விட்டு அசையாது. அவ்வளவு பிடிவாதம் இதற்குண்டு.




விலங்கு இது.

கோடைக்காலத்தில் பழுப்பு நிறத்தில் தென்படும் இதன் ரோமங்கள், குளிர் காலத்தில் வெண்ணிறமாக மாறிவிடும். இளவேனில் காலத்தில் மீண்டும் பழுப்பு நிறத்தை அடையும். இரவு, பகல் எந்த நேரத்திலும் இரைதேடும் இந்த விலங்குக்கு மரமேறவும் தெரியும்; நீந்தவும் தெரியும்.



வரைந்து பாருங்கள்!

வழங்குபவர் : எஸ்.வஜ்ரவேலு



இந்த டைஜஸ்டில்...





கோகுலம் டைஜஸ்ட்

வரலாறு வகுப்பு. பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியை. அவர் எப்போதும் மாணவிகளை உற்சாகப்படுத்தி, செயல்பட வைப்பவர். விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் நிச்சயம் வெற்றி தரும் என்பதை பலவிதமாகச் சொல்லித் தருவார். அன்றும் சொன்னார் :



'**கி**ரிக்கெட் பற்றி சுவையான கட்டுரை எழுத வேண்டும்; இருபது நிமிஷம்தான். நேரம்' என்றார் தமிழாசிரியர். அனைவரும் பரபரவென்று எழுத ஆரம்பித்தனர். ஆசிரியரும் வகுப்பறையினுள் சுற்றி நடந்து கொண்டிருந்தார். சுமார் ஐந்து நிமிடம்தான் கழிந்திருக்கும். சட்டென்று எழுந்தான் ஒரு மாணவன். பேப்பரை மடித்து தன் டேபிளில் வைத்துவிட்டு வெளியே நடந்தான். 'அப்படி என்ன எழுதியிருப்பான்' என்று நினைத்த ஆசிரியர், அந்த விடைத்தாளை எடுத்துப் படித்தார்; எங்களிடமும் சொன்னார். ''மழை பெய்கிறது; ஆட்டம் நடக்கவில்லை!'' அதைக் கேட்டு, நாங்கள் சிரித்த சிரிப்பில் வகுப்பறையே அதிர்ந்தது.



- எஸ்.தணிகைவேல்,

உ., என் 762, காஞ்சிபுரம்

''சத்ரபதி சிவாஜி, போரில் முதல் வெற்றியைச் சந்தித்தபோது அவருக்குப் பதின்மூன்று வயது. சரோஜினி நாயுடு, சிறப்பான கவிதைகளை வடிக்க ஆரம்பித்தபோது அவர் வயதும் பதிமூன்றுதான்'' என்றவர், அருகிலிருந்த மாணவியிடம் கேட்டார் : ''இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறே?''

குறும்பு நிரம்பிய அந்த மாணவி சொன்னாள் : ''எதுல விருப்பமோ, அதுல அவங்களைப் போக விட்டாங்க. அதனால அவங்களால முடிஞ்சுது. இப்ப அப்படியா? நீங்க வரலாறு படின்றீங்க. கணக்கு மிஸ் கணக்கு போடலியான்றாங்க. அறிவியல் மிஸ் நாளைக்கு டெஸ்டுங்கறாங்க. சரின்னு வீட்டுக்குப் போனா, ட்யூஷன் கிறாங்க. எங்க நாங்க வரலாற்றுல இடம் பெறுவது'' என்றாள் டைமிங் காக. அதைக் கேட்டு ஆசிரியை உட்பட அனைவரும் சிரித்தோம்.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475,
கோபி

"தூசி நிற்காது!"

வீட்டுக்குத் திருப்புவதற்காக, பஸ்ஸில் அமர்ந்திருந்தோம். உள்ளே நடத்துனர் டிக்கெட் கொடுத்துக் கொண்டிருந்தார். புறப்படத் தயாரான நிலையில், கண்டக்டரிடம் கேட்டார் : ''சார், தூசி நிக்குமா?'' உற்சாகமான மனநிலையில் இருந்த கண்டக்டர் சிரித்தபடியே சொன்னார். ''தூசியெல்லாம் நிக்காது; பஸ் போற வேகத்துல பறந்து போயிடும்'' அதைக் கேட்ட அனைவரும் கலகலவென்று சிரித்தனர்; அந்த பெரியவரைத் தவிர! காரணம், தூசி என்பது காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள ஓர் ஊர்.

- ஏ.சுந்தரராஜன், உ. எண் 1158,
திருக்கழுக்குன்றம்







'கல்லில் வடித்த சிற்ப அற்புதம்' என்று சொல்லப் படும் பலகணியைக் கொண்ட திருவலஞ்சுழிக்கு மிக அருகில், கோயில் நகரான கும்பகோணம் வட்டத்தில் உள்ளது எங்கள் ஊரான சுவாமிமலை.

காவிரியின் வண்டல் நிலப்பகுதி என்பதால், எங்கள் பகுதியில் மிகச் சிறப்பாக விவசாயம் நடைபெறுகிறது. தவிர, இங்குள்ள இன்னொரு தனிச்சிறப்பு, உலோகச் சிலை வார்ப்பு! உலோகங்களை வடிக்குமுன் அதற்கான வடிவத்தை அச்சு செய்வார்கள். தேவையான திருத்தங்கள் அனைத்தையும் செய்த பின்பு, அதனைக் கொண்டு உலோகத்தைக் காய்ச்சி சிற்

– எம்.அசாருதீன்,
எட்டாம் வகுப்பு,
சுவாமிநாதா உதவிபெறும்
நடுநிலைப் பள்ளி,
சுவாமிமலை



சிற்ப நிலம்!




பங்களை வடிப்பார்கள். அப்படிச் செய்யும்போது, சிலைகளின் நுணுக்கமான வேலைப்பாட்டுக்கு, வண்டல் மண் அவசியம். மற்ற பகுதிகளில் கிடைக்கும் மண்ணைவிட, இங்கு கிடைக்கும் மண், வார்ப்புத் தொழிலுக்கு மிகவும் ஏற்றது. அதனால்தான், இந்தப் பகுதியில் உலோகச் சிலை வார்ப்பு, மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

எங்கள் ஊரின் பெயருக்குக் காரணமான முருகப் பெருமான், சிறிய குன்றின் மீது காட்சி தருகிறார். பிரணவ மந்திரத்தின் பொருளை, தன்னுடைய தந்தையான சிவபெருமானுக்குச் சொன்னதால் 'தகப்பன் சுவாமி' என்றும் அவருக்குப் பெயர். சுவாமிநாதன் என்ற பெயரும் அதனால் அமைந்ததுதான். அவர் பெயராலேயே ஊருக்கும் சுவாமிமலை என்று பெயர் வந்தது. முருகப் பெருமானின் ஆறு படைவீடுகளில் இதுவும் ஒன்று. இதைத் திருவேரகம் என்பார்கள். அருணகிரிநாதர் இந்த முருகப் பெருமான்மீது திருப்புகழ் பாடியுள்ளார்.

கும்பகோணத்தில் இருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது எங்கள் ஊர். இங்கு கொய்யாப்பழம் பிரபலமானது. சேலத்துக்கு மாம்பழம் என்றால், எங்கள் ஊருக்கு இது. கும்பகோணத்தில் இருந்து திருவையாறு செல்லும் பேருந்துகள், திருவலஞ்சுழியைக் கடந்து இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். ஸ்வேத விநாயகர் என்று சொல்லப்படும் வலம்புரி விநாயகர், திருவலஞ்சுழியில் கோயில் கொண்டிருக்கிறார். காவிரியை மீண்டும் வெளிப்படுத்திய ஏரகண்ட முனிவரின் மிக அபூர்வமான சிலையையும் இங்கே காணலாம்.

இயற்கை அழகு, கலை நுட்பம் ஆன்மிகச் சிறப்பு என்று, பலவகையிலும் சிறப்புடையது எங்கள் ஊரான சுவாமிமலை!

வண்ணம் தீட்டுங்கள்!



கூடவே,
கோழிக்
குஞ்சுக்கும்
ராஜாளிக்கும்
வசனம்
எழுதலாமே..!

முத்து!

கதை : இரா.ரமேஷ், பத்தாம் வகுப்பு, அரசு உ.நி. பள்ளி, காளப்பட்டி
படம் : பிள்ளை



பழூர்ச் சந்தைக்கு காவலுக்கு வந்த இன்ஸ்பெக்டரின் பார்வையில் தென்பட் டாள் அந்தச் சிறுமி. உடன் வந்த யாரையோ தவறவிட்டுவிட்டாள் என்பது அவள் அழுகையிலேயே புரிந்தது அவருக்கு. போலீஸ் உடையில் இருந்த அவர் அழைத்ததால், அந்தச் சிறுமி மேலும் பயந்து அழுதாள்.

சுமார் நான்கு வயதிருக்கலாம். 'சொன்னதைக் கேட்கலைன்னா, போலீஸ்ல புடிச்சு குடுத்துடுவேன்' என்று வீட்டில் பயப்படுத்தி வளர்த்திருப்பார்கள் போலும். குழந்தையின் கையில் ஒரு சாக்லெட் பாரை வாங்கித் தந்தார். அதை வாங்கிக் கொண்ட சிறுமி, பயம் குறைந்து சிரித்தாள். மெல்ல மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

"என் பேரு கீதா, எங்கம்மாவைக் காணும்."

குரலில், மழலை முற்றிலுமாக விடு படவில்லை. சாக்லெட் சாப்பிட ஆரம் பித்த வேகத்தில், அழுகை நின்றது.



அழகு

"உங்கம்மாவோட சந்தைக்கு வந்தியா?"

"ஆமாம்."

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"அங்க... பிள்ளையார் கோவில் கிட்டே இருக்கு."

"வீட்ல யார் இருக்காங்க?"

"நான், அம்மா மட்டும்தான். அப்பா வேலைக்குப் போயிட்டாங்க."

அந்த வட்டாரத்தில் நாலைந்து பிள்ளையார் கோயில்கள். குழந்தைக்கு இடத்தின் பெயர் சொல்லத் தெரியவில்லை. யோசித்தார். அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. சிறிது யோசனையுடன் குழந்தையிடம் மீண்டும் கேட்டார்.

"உங்கம்மா எப்படி இருப்பாங்க?"

"ரொம்ப அழகா இருப்பாங்க."

'பலே; குழந்தையைத் தூக்கிக் கொண்டு சந்தைக்குள் நடந்தால், இவள் அம்மாவைக் கண்டுபிடித்துவிடலாம்' என்று தோன்றியது. அதன்படியே நடந்தார். நேரம்தான் ஓடியது. அவள் தாயைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மனம் சலித்து ஜீப்புக்குத் திரும்பிய வினாடியில் கேட்டது அந்தக் குரல்: 'செல்லம்'. குழந்தை சிலிர்த்துத் திரும்பியது. 'அம்மா' என்று தாவியது.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்தார். பரட்டைத் தலை, குழிந்த கண், துருத்திய பல்... என்று சுமாரான தோற்றமுடன் ஒரு பெண் நின்றாள். சிரித்தபடியே குழந்தை சொன்னது : 'இதான் என் அம்மா!"

அதுவரை அழகான முகத்தைத் தேடிய இன்ஸ்பெக்டர் 'குழந்தையின் மனம்தான் எத்தனை அழகு!' என வியந்தார்.



- ப.விக்னேஷ்,
உ. எண் 1546,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்

உங்கள் கைவண்ணம்!

ஆர்.திவ்யா,
ஆறாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக்
பள்ளி,



எம்.ரேணுகா தேவி,
எட்டாம் வகுப்பு,
காமராஜ் மே.நி. பள்ளி,
நம்பியூர்






கே.தனசேகர், உ. எண் 644,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

எஸ்.கணேஷ்,
ஒன்பதாம் வகுப்பு, காமராஜ்
மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்





டி.நந்தினி,
ஏழாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்



ஆர்.பிரதீபா,
எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

வி.நித்யா,
ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்



ரா.கதிர்வேல்,
ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்



வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள்.





விடை :
1. பெட்டியில் லாக்
2. சட்டை நிறம்
3. வாளியில் கைப்பிடி
4. அமர்ந்திருப்பவரின் கால்
5. குச்சியின் நீளம்



சுற்றும் இறக்கை!



பொமரேனியன் (Pomeranian), ராஜபாளையம்... என்று நாய்களில் பல வகைகளை இன்று வீட்டில் வளர்க்கிறோம். ஆனால், தொடக்க காலத்து நாய்கள், கொடூரமானவையாக, மிகப் பெரிய உருவில் இருந்தன என்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல, வீட்டில் வளர்க்கக்கூடிய நாய் இனங்கள் கண்டறியப்பட்டன. இவற்றில், பொமரேனியன் என்னும் வகை, போலந்து நாட்டின் 'பொமரேனியா' என்ற இடத்தைச் சேர்ந்தவை. அதனால், 'பொமரேனியன்' என்று பெயர்.






செங்குத்தாக மேலேறவும், கீழிறங்கவும், முன்னாலும், பின்னாலும் எல்லாத் திசைகளிலும் இயங்க வல்லது ஹெலிகாப்டர். வானில் ஒரே இடத்தில் இதை நிலைநிறுத்தவும் முடியும். ஆபத்துக் காலங்களில் மீட்புப் பணிகளில் அதிகமாக ஈடுபடுத்தப்படுபவை இவைதான். ஹெலிகாப்டர் என்ற பெயர் ஹெலிக்ஸ், பெட்ரோன் என்ற கிரேக்கச் சொற்களில் இருந்து உருவானது. 'ஹெலிக்ஸ்' என்றால் 'சுற்று'; 'பெட்ரோல்' என்றால் 'இறக்கை'. அட; சுற்றும் இறக்கை!

இதயப் பகுதி இணைந்து பிறக்கும் குழந்தைகளை 'சயாமீஸ் ட்வின்ஸ்' (Siamese twins) என்பர். 1811-ஆம் ஆண்டு, 'சயாம்' எனப்பட்ட இன்றைய தாய்லாந்தில், இதயப் பகுதி ஒட்டிப் பிறந்த இரட்டையர் இருந்தனர். அவர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று, தங்கள் அரிய உடலமைப்பைக் காட்டி வந்தார்களாம். இவ்வாறு உலகத்தவரால் அறியப்பட்டதால், அவர்களைக் குறிப்பிட்ட 'சயாமீஸ் ட்வின்ஸ்' என்ற சொல்லே, மருத்துவ உலகிலும் நிலை பெற்றுவிட்டது.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபி



I. 1. மூன்று சொற்கள் சேர்ந்து அமைந்த இடத்தின் பெயர். முதல் இரண்டு எழுத்து செல்வம் என்று சொல்லும். அடுத்த மூன்றும் நீர்ப்பூ ஆகும். கடைசி இரண்டோ நீர்நிலை என்றால், அந்தப் பெயர் என்ன?

2. எட்டெழுத்து ஊர். யாவருக்கும் தெரிந்த ஊர். முதலும், இரண்டும் அழ காகும். மூன்றும், நான்கும் எருதாகும் ஏழும் எட்டும் அடிமரமாம். அந்த ஊரின் பெயர் என்ன?

3. எங்க வீட்டு ராசா தண்ணிப் பக்கம் போனா தாவிக் குதிப்பார் ராசா - அவர் யார்?

- த.தாரணி, உ. எண் 785, தஞ்சாவூர்

II. 1.பூப்பூவா இருக்கும். ஆனால் தலையில் வைக்க முடியாது-அது என்ன?

2.திரியில்லாத விளக்கு; திரிலோகம் எல்லாம் தெரியும் - அது என்ன?

- ஆர்.பிருந்தா, மதுரை

III. 1. காலடியில் கிடக்கிறானே என்று இவனை உதைக்க முடியாது - இவன் யார்?

- எஸ்.வினித் மாதவன், மதுரை

IV. 1.பார்க்காத விழிகள் பலநூறு உண்டு. நடக்காத கால்கள் நான்கு மட்டும் உண்டு - அது என்ன?

2. விரல்போல் பெட்டிக்குள் வெண் பரல் போல் முத்துக்கள் - அது என்ன?

- ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை

V. 1. வெள்ளைக் குதிரையும், கறுப்பு குதிரையும் மாறி மாறி ஓடும், பிடிக்க



கால் இல்லாத மான்!



முடியவில்லை - அது என்ன?

2. வெள்ளை மாளிகைக்கு வாசல் இல்லை, வழியும் இல்லை - அது என்ன?

3. வீட்டுக்கு வரும் விருந்தாளியை வரவேற்க ஆளில்லை - அது என்ன?

4. வீட்டில் இருக்கிற அண்டாவுக்கு அடைப்பில்லை - அது என்ன?

5. வெள்ளைக் கத்தரிக்காய் கள்ளக் கூக்குரல் போடுது - அது என்ன?

6. வெள்ளிக்கட்டி மண்ணுக்குள்ளே - அது என்ன?

- வெ.இராதாகிருஷ்ணன், தஞ்சாவூர்

VI. 1.நீந்தத் தெரியாதவள், நீருக்குள் குதிக்கிறாள்- அவள் யார்?

- ஆர்.பத்மப்ரியா, ஹூப்ளி

VII. 1.பள்ளிக்குச் செல்வான், பாடம் படிக்கமாட்டான் - அவன் யார்?


2. கால் இல்லாத மான், வேர் இல்லாத புல்லைத் தின்னும் - அது என்ன?

3. காட்டிலே தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம் - அது என்ன?

- பி.பரத், உ. எண் 1257, சிதம்பரம்

விடைகள் :
I. 1. திருவல்லிக்கேணி, 2.திருவிடைமருதூர், 3.தவளை
II. 1. காலிஃப்ளவர், 2.சூரியன்
III. 1.முள்
IV. 1.கயிற்றுக்கட்டில், 2.வெண்டைக்காய்
V. 1.இரவும், பகலும், 2.கோழிமுட்டை, 3.செருப்பு, 4.கிணறு, 5.சங்கு, 6.முள்ளங்கி
VI. 1. வாளி
VII. 1. பள்ளிப் பேருந்து, 2.மீன், பாசி, 3.தேன்கூடு




கோகுலம்
ஆகஸ்ட் 2010


சாம்பியன்ஸ்
CHAMPIONS

வேலு யோசனையில் இருந்தான். 'ஏதாவது செய்ய வேண்டும். பரமனை என்ன செய்தால் வருந்துவான்' என்று நீண்டது அவன் சிந்தனை. அப்போது தான் அவனுடைய பசுவின் நினைவு வந்தது. கௌதமி என்று அதற்குப் பெய ரிட்டு வளர்த்து வந்தான் பரமன்.

அந்தப் பசுவுக்கு புத்திகூர்மை அதி கம். வேலுவைப் பார்த்தாலே தலையைச் சிலுப்பிக் கொண்டு முட்ட வரும். அதை நினைத்தவுடன் உற்சாகமானான் வேலு. 'சபாஷ், அந்தப் பசுவை தன் வீட்டின் அருகிலுள்ள பாழடைந்த கிணற்றில் தள்ளி விடலாம். அதனால், திமிர் பிடித்த அந்தப் பசுவும் இறந்து போகும்; பரமனையும் தண்டித்த மாதிரியாகும்' என்று, முட்டாள்தனமான முடிவுக்கு வந்தான் வேலு.

காரணம் பரமன் மிகவும் நல்லவன். பசுவின் பாலை தண்ணீர் கலக்காமல் விற்று அதில் வரும் வருவாயைக் கொண்டு எளிய வாழ்வு நடத்தி வந்தான் பரமன். எல்லாரிடமும் அன்பாகப் பேசு வான்; முடிந்தவரை அனைவருக்கும் உதவுவான். அதனால், ஊரிலுள்ள அனைவருமே அவனிடம் அன்பு பாராட்டினார்கள்.

'தன்னுடைய சுபாவம்தான், தன்னை அனைவரிடமிருந்தும் அன்னியப்படுத்தி உள்ளது' என்பதைப் புரிந்து கொள்ளாத வேலு, பரமனை விரோதியாகப் பார்த் தான். அவனுக்குத் தீங்கு செய்யத் துணிந்ததும் இதனால்தான்.

மறுநாள்...

திட்டமிட்டபடியே, தன் வீட்டின் பின் புறம் இருக்கும் கிணற்றின் பக்கம் வந்து கொண்டிருந்த கௌதமியைப் பார்த்து விட்டான் வேலு. சத்தமில்லாமல் அதன் பின்பக்கமாகச் சென்றான். கைகளால் உந்தி வேகமாக அதைத் தள்ள முற்பட் டான். ஆனால், அவன் வருவதை கவனித்துவிட்ட கௌதமி, வேகமாகப் பாய்ந்து ஒதுங்கியது. அதை எதிர்பார்க் காத வேலு, 'தொபீர்' என்று கிணற்றினுள் விழுந்து அலறினான். பசு அதைவிடப்





கௌதமியின் சாதுர்யம்!

பெருங்குரலில் அலறியது.


அந்தக் கூச்சலைக் கேட்ட ஊர்க்காரர்கள், ஓடிவந்து அவனைக் காப்பாற்றினார்கள். தான் தப்பியது அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. 'கௌதமி எப்படி மிகச் சரியாக நகர்ந்தது? என்னுடைய திட்டம் அதற்குத் தெரிந்துவிட்டதோ?' என்ற எண்ணம் அவனை உறுத்தியது.

அதே சமயம், 'பசு மட்டும் கத்தியிருக்காவிட்டால் தன் அலறல் யாருக்கும் கேட்டிருக்காது. தான் பிழைத்திருக்கவும் முடியாது.' என்பதும் அவனுக்குப் புரிந்தது.

பொறாமைதான், தன் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தியது என்பதும் புரிந்தது. இனி எப்போதும், எதற்கும் பொறாமை கொள்வதில்லை என்றும் உறுதியெடுத்துக் கொண்டான் அவன்.

- சு.அபிஷேக், உ.எண்; 518, சென்னை

வழி காட்டுங்கள்!




திருடனைப்
பிடிக்க
போலிஸுக்கு
வழி
காட்டுங்கள்

4 லட்சம் டாலர்!

கடல் மட்டத்திலிருந்து சுமார் 6000 அடி உயரத்தில் இருந்து, நான்கு அமெரிக்க அதிபர்கள் நம்மையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்கவே ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? நிஜம்தான். அமெரிக்கவில், யூடா நகரில் (Utah) உள்ள, ஆர்ச்சஸ் தேசியப் பூங்காவில் (Arches National Park) அமைந்துள்ளன இந்தச் சிலைகள். இவற்றை, 'ரஷ்மோர் மலையின் தேசிய நினைவுச் சின்னம்' (Mount Rushmore National Monument) என்று குறிப்பிடுகிறார்கள்.

ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்சன், ஆபிரகாம் லிங்கன், தியோடர் ரூஸ்ஸ்வெல்ட் ஆகிய நான்கு அதிபர்களின் தலைப்பகுதிகள் இந்த மலையில் மிக மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டுள்ளன. இதைச் செதுக்கியவர் கட்ஸோன் போர்க்லம் (Gutzon Borglum) என்ற சிற்பி. ஆனால், இந்தப் பணியை அவர் முழுமையாக முடிக்கவில்லை. பணி முற்றுப்பெறும் முன்பே அவர் இறந்துவிட்டார். அந்தப் பணியைத் தொடர்ந்து முடித்தவர், அவருடைய மைந்தர் லிங்கன் போர்க்லம் (Lincoln Borglum). இதை அமைக்க நான்கு லட்சம் அமெரிக்க டாலர் செலவானது என்பது குறிப்பிடத்தக்கது.

மணற்பாறைகளால் ஆன இப்பகுதியில், இயற்கை படைத்துள்ள அபூர்வமான வளைவுகள் ரசிக்கத் தகுந்தவை; வியப்பூட்டுபவை. இவற்றில் மிக உயரமான வளைவு என்பது 5,653 அடி; குறைவானது 1,245 அடி. சுமார் 310 சதுர கிலோமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது, இந்தப் பூங்கா.



- மு. சுவாமிநாதன்,
பத்தாம் வகுப்பு, வித்யாலய
உயர்நிலைப்பள்ளி, கோவை.



நிறம் மாறுவது ஏன்?

மனிதர்களுக்கு வயதானால் தலைமுடி நரைப்பதைப் போல, மிருகங்களுக்கு நரைப்பதில்லை ஏன்?

மனிதர்களின் முடியில் 'கெரடின்' என்னும் புரதம் உள்ளது. வயதானால் இந்தப் புரதத்தின் அளவு குறைகிறது. அதனால், முடி நரைத்துவிடுகிறது. ஆனால், மிருகங்களின் முடியில் அந்தப் புரதம் இல்லை. அதனால், வயதானாலும் அவற்றின் முடி நரைப்பதில்லை.


நறுக்கிய ஆப்பிள் நிறம் மாறுவதேன்?


ஆப்பிளை நறுக்கி வைத்தவுடன், ஆப்பிளில் உள்ள டேனிக் அமிலமும், காற்றிலுள்ள ஆக்ஸிஜனும் வினை புரிந்து, 'பாலிஃபினால்'-களை உருவாக்குகின்றன. அதனால், பிரவுன் நிறம் ஏற்படுகிறது.

ஆரஞ்சு இனிப்பாகவும், எலுமிச்சை புளிப்பாகவும் இருப்பதேன்?

எலுமிச்சையில் அமிலத்தன்மை அதிகம். எனவே அது புளிக்கிறது. ஆரஞ்சில் சர்க்கரை அதிகம். எனவே, ஆரஞ்சு இனிக்கிறது.

- ஜி.பிரனவ், உ. எண் 424, திருச்சி





நிறமூட்டிகள் கூடாதா?

நிறமூட்டிகளைப் பயன் படுத்தித் தயாரிக்கும் உணவு வகைகளை உண்பதால் ஆரோக்கியத்துக்கு ஆபத்து என்கிறார்களே, எப்படி?

நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களுக்கு நிறத்தைத் தருவதற்காக, செயற்கை நிறமூட்டிகளையும், மணமூட்டிகளையும் நிறையச் சேர்க்கிறார்கள். இவற்றில் முக்கியமானது, 'அசோ'சாயங்கள். மென் பானங்களிலும், ஜாம், சாஸ், கெச்சப் போன்றவற்றிலும் இவை கலக்கப்படுகின்றன. இவை புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை. தவிர, அல்சர் மற்றும் மனநோய்களும் வரலாம். கேசரியில் சேர்க்கப்படும் 'கேசரி பவுடர்', குல்ஃபியில் கலக்கப்படும் 'கேவ்ரா எசென்ஸ்' போன்றவற்றில் ஹைட்ரோ கார்பன், நைட்ரோசமைட், நைட்டோசமைன் என்ற புற்றுநோய் ஊக்குவிப்பான்கள் உள்ளன. ஐஸ்கிரீம், சாக்லெட், கேக் போன்ற குழந்தைகள் விரும்பும் உணவில், செயற்கை 'வெனிலா எசென்ஸ்' சேர்க்கப்படுகிறது. இது அரிப்பு, சிவப்புத் தடிப்புகள், உதடுவீக்கம் போன்ற ஒவ்வாமை விளைவுகளை உண்டாக்குகின்றது. இது போன்றே ஜாங்கரி, லட்டு, பஜ்ஜி... போன்ற உணவுப் பண்டங்களில், நிறம் கொடுப்பதற்காக 'கோல்தார்' சாயங்கள் சேர்க்கப்படுவதுண்டு. இவையும் ஒவ்வாமை துவங்கி, பல்வேறு ஆரோக்கியக் கேடுகளை ஏற்படுத்தக் கூடியவை.

– க.ஆர்த்தி, உ. எண் 40,
இராஜபாளையம்.





தடுக்கும் 'ணை'?

I. கீழே சில ஊர்ப் பெயர்களும், அந்தந்த ஊர்களை நினைவூட்டுகிற சிறப்பான உணவுப் பதார்த்தமும் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்துங்கள் பார்க்கலாம்.

1. திருப்பதி	அ) ஆப்பிள்
2. கொல்கத்தா	ஆ) பஞ்சாமிர்தம்
3. பம்பாய்	இ) அல்வா
4. டில்லி	ஈ) மாம்பழம்
5. மைசூர்	உ) தூத்பேடா
6. ஹைதராபாத்	ஊ) ரஸகுல்லா
7. காஷ்மீர்	எ) போளி
8. மங்களூர்	ஏ) பாதுஷா
9. சேலம்	ஐ) முறுக்கு
10. திருநெல்வேலி	ஒ) லட்டு
11. மணப்பாறை	ஓ) போண்டா
12. பழனி	ஔ) பிரியாணி

– சி.அர்ஜுன், உ. எண் 1149, சிதம்பரம்

II. இரண்டு பக்கெட்களில் தண்ணீர் உள்ளது. முதல் பக்கெட் தண்ணீரின் கொதிநிலை 20 சென்டிகிரேடு. 2-வது பக்கெட் தண்ணீரின் கொதிநிலை, 20 ஃபாரன்ஹீட். இப்போது ஒரு பந்தை முதல் பக்கெட்டிலும், மற்றொரு பந்தை

இரண்டாவது பக்கெட்டிலும் ஒரே நேரத்தில் போட்டால் எது முதலில் அடிபாகத்தைத் தொடும்?

- ஆர்.பத்மப்ரியா, ஹூப்ளி

III. பின்வரும் கணக்கைக் கவனியுங்கள். இவை சரியா?

1) $(1+29+50+29)^3 = 1295029 = 109^3$

2) $(2+92+42+07)^3 = 2924207 = 143^3$

3) $(3+65+282+64)^3 = 36528264 = 154^3$

4) $(3+58+15+77)^3 = 3581577 = 153^3$

5) $(7+64+53+73)^3 = 7645373 = 197^3$

6) $(7+76+23+92)^3 = 7762392 = 198^3$

7) $(7+88+05+99)^3 = 7880599 = 193^3$

- எம்.தமிழ்செல்வன், கோவை


IV. ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எப்படி அவன் கொல்லப்படலாம் என்பதற்கு மூன்று வாய்ப்புகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. மூன்று அறைகள். அதில் ஒன்றில் அவன் தள்ளப்படுவான். அவற்றில் முதல் அறையில் துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள்; இரண்டாவது அறையில் விஷத் தன்மை கொண்ட தேள்கள்; மூன்றாவது அறையில் ஒரு வருடமாகப் பட்டினியுடன் கிடக்கும் சிங்கம்; இவற்றில் எந்த அறையைத் தேர்ந்தெடுத்தால் அவன் உயிர் பிழைக்கலாம்?

- பத்மப்ரியா, ஹூப்ளி

V. தெரிந்த சொற்கள்தான். கவனித்துச் சொல்லுங்கள்.

1..தொடுக்கும் 'ணை'?
2. தடுக்கும் 'ணை'?
3. அமரும் 'ணை'?
4. தீட்டும் 'ணை'?
5. குழந்தை படுக்கும் 'ணை'?
6. உடன் இருக்கும் 'ணை'?
7. அரசு வெளியிடும் 'ணை'?


- த.தாரணி, நான்காம் வகுப்பு, தூய மார்ஸினா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்



விடைகள் :

I. 1) ஒ. 2) ஊ. 3) உ. 4) ஏ. 5) ஓ. 6) ஔ. 7) அ. 8) எ. 9) ஈ. 10) இ. 11) ஐ. 12) ஆ. **II.** முதல் வாளியில் உள்ள நீரில் போடும் பந்து ஏனெனில், 20^0 ஃபாரன்ஹீட் என்பது பனிக்கட்டி. எனவே அதில் பந்து உள்ளேயே போகாது. **III.** அனைத்தும் சரி **IV.** மூன்றாவது அறைதான். ஏனெனில், ஒரு வருடமாகப் பட்டினியுடன் கிடக்கும் சிங்கம் உயிருடன் இருக்காதே. **V.** 1. கணை, 2.அணை, 3.மணை, 4.சாணை, 5.ஏணை, 6.துணை, 7.ஆணை

புள்ளிகளை இணையுங்கள்




கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து
ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்

அடிமையின் அடிமை!

கதை : ஆர்.ஆசிக் அகமது, உ. எண் 1157, கம்பம் படம் : பிள்ளை





"வெள்ளை மாத்திரை கொஞ்சம் கசக்குது. சிவப்பு மாத்திரை கொஞ்சம் இனிக்குது."

"சரி, இதை எதுக்கு என்கிட்டே சொல்ற?"

"நீங்கதானே டாக்டர் மாத்திரையை சாப்பிட்டுட்டு எப்படி இருக்குன்னு சொல்லச் சொன்னீங்க."

- ர. தினேஷ்குமார், உ. எண் 1080, நம்பியூர்

கொஞ்சம் இனிப்பு...

"பாக்கு மரத்துக்கும், தென்னை மரத்துக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. என்னன்னு சொல்லு?"

"இரண்டிலையுமே மாங்காய் காய்க்காது!"

- சு.அபிஷேக், உ. எண் 518, சென்னை





"எங்க சார் போறீங்க?"

"பஸ்ஸுக்குள்ளதான்."

"அட, அதைக் கேட்கலை சார்; எங்கே போறீங்க?"

"அட, உட்காரத்தான் சார் போறேன்."

"வயிறு ஆபரேஷன் பண்ணதுலே யிருந்து தும்மல் வந்துக்கிட்டே இருக்கு டாக்டர்."

"அடப்பாவி, என் மூக்குப் பொடி டப்பா காணாமல் போனபோதே சந்தேகப்பட்டேன்."

- ஆர்.பாலாஜி,
எட்டாம் வகுப்பு,
பாளையங்கோட்டை



கொஞ்சம் கசப்பு...



"தேங்காய் மட்டை - இதைத் திரித்துக் சொல்."

"கயிறு சார்."

- ஜி.எஸ்.சபரி, உ. எண் 1475,
கோபி

"என்னப்பா சர்வர் சாம்பார்ல பல்லி விழுந்திருக்கு."

"கொஞ்சம் இருங்க என்ன பலன்னு பஞ்சாங்கம் பார்த்துச் சொல்றேன்.

- பி.பரத், உ. எண் 1257,
சிதம்பரம்



முத்தின்

'சே, போயும் போயும் ஒரு புறாகிட்டே ஏமாந்துட்டோமே' என்ற கோபத்துடன் நடந்து கொண்டிருந்தான் கந்தன். நேற்று, தான் பிடித்த இரண்டு புறாக்களை விடுவித்தான். அப்போது அவை இரண்டு முத்துகளைப் பரிசளித்தன. வீட்டுக்குப்போய்ப் பார்த்தால், அவை கரித்துண்டுகளாக இருந்தன. அதுதான் கந்தனின் கோபம்! அவன் எதிர்பார்த்ததைப் போலவே, மரத்திலிருந்தன அந்தப் புறாக்கள்.

''உங்களை உயிரோடு விட்ட என்னையே ஏமாற்றுகிறீர்களா? நீங்கள் கொடுத்தது முத்துதானா? எப்படி அவை கரித்துண்டுகளாகின? மனிதர்களிடம்தான் பொய்யும், ஏமாற்றுத்தனமும் இருக்கும் என்றால், நீங்களும் அப்படித்தான் இருக்கிறீர்கள்!'' கோபத்தில் படபடத்தான் கந்தன்.

அவன் பேசி முடிக்கும் வரை மௌனமாக இருந்த புறாக்கள் பேசின:



''நாங்கள் எந்தப் பொய்யும் சொல்லவில்லை. 'இனி பிற உயிர்களைக் கொல்வதில்லை' என்று உறுதி கொடுத்தாயே. அப்படி நடந்து கொண்டாயா? 'வேறு உயிர்களைக் கொன்றால், முத்துக்கள் ஒளியிழந்து போகும். பயன்படாது' என்று எச்சரித்தோமே. சரி என்று சொன்ன நீ என்ன செய்தாய்? வழியில் ஒரு முயலைப் பிடித்துப் போனாய் இல்லையா? எங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை என நினைத்தாய். உன் வார்த்தையை நீதான் மீறினாய். நாங்களல்ல.''

திகைத்துப் போனான் கந்தன். தன்னுடைய செயல் புறாக்களுக்குத் தெரியாது என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான். புறாக்கள் அதைக் கேட்டவுடன் அவனால், பதில் பேச முடியவில்லை. தலைகவிழ்ந்து நின்ற அவனைப் பார்த்து, அந்தப் புறாக்கள் மீண்டும் பேசின:

"உன்னுடைய குடும்பத்தின் பசி உனக்கு எவ்வளவு கவலை தருமோ, அதே கவலை நீ பிடித்துச் சென்ற தாய் முயலுக்கும் இருக்குமல்லவா? உன்னுடைய

மதிப்பு!



குடும்பமும், குழந்தைகளும் உனக்கு முக்கியம் என்றால், அது அந்த முயலுக்கும் இருக்காதா? அது ஏன் உனக்குப் புரியாமல் போனது?

"சரி; வீட்டுக்குப் போ. இப்போது முத்து மாறியிருக்கும். ஆனால், இன்னொருமுறை இப்படிச் செய்யாதே; செய்தால், எங்களைத் தேடி வராதே."

பேசி முடித்தன புறாக்கள்.

கந்தன் தலைகுனிந்தபடி, வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

புறாக்கள் கொடுத்த முத்தைப்போல அவன் மனத்திலும் ஒளி பரவ ஆரம்பித்தது.

- எம்.எஸ். ஷண்முகப்ரியா,
உ.எண்.622, சேலம்.

சுட்டீஸ் கைவண்ணம்!

ரா.நித்யஸ்ரீ,
உ. எண் 852,
டிவி.எஸ். ஆரம்பப் பள்ளி, மதுரை



ஆர்.செல்வகணபதி,
ஆறாம் வகுப்பு, காந்தி
நகர் மெ. மே.நி. பள்ளி,
திருவண்ணாமலை






ஜே.சாய்ராம்,
உ. எண் 1595,
சென்னை



மீரா சிவராமகிருஷ்ணன்,
நான்காம் வகுப்பு,
பக்தவத்சலம்
வித்யாஷ்ரம்,
சென்னை



கி.ஆதர்சனா,
மூன்றாம் வகுப்பு, சர்ச்பார்க்
மேல்நிலைப் பள்ளி, சென்னை

பறவை மனிதர்!



* 1785-ஆம் ஆண்டு பிறந்தவர் இவர்.
* இவரது தந்தை, பிரெஞ்சு ராணுவ அதிகாரி.
* இளம் வயதில் தாயை இழந்த இவர், தம் 18-ஆம் வயதில் (1803) அமெரிக்கா வந்தடைந்தார்.
* இயற்கை ஆர்வலர், பறவையியல் ஆய்வாளர், வேட்டைக்காரர், ஓவியர் எனப் பன்முகத் திறமை பெற்றவர்.
* தாம் குடியேறிய நாட்டில் குறிப்பாக வட அமெரிக்காவில், ஒவ்வொரு பறவை இனத்தையும் வரையும் பொறுப்பைத் தனக்குத்தானே விதித்துக் கொண்டார்.



* பறவைகளை அவற்றின் இயற்கைச் சூழலில், அவை தம்மைச் சுத்தம் செய்து கொள்வது, கூடு அமைப்பது, குஞ்சுகளுக்கு உணவூட்டிப் பேணி வளர்ப்பது போன்ற தோற்றங்களில் ஓவியங்களாகத் தீட்டினார்.
* அதன் விளைவாக, 'அமெரிக்கப் பறவைகள்' (Birds of America) என்ற பெரிய தொகுப்பு உருவானது. அதில் அமெரிக்காவின் 60 சதவீதப் பறவைகள் இடம் பெற்றிருந்தன.
* அந்தத் தொகுப்பு (அமெரிக்கப் பறவைகள்) நான்கு பாகங்களாக வெளியிடப்பட்டது. ஒவ்வொன்றும் 20 கிலோவுக்கும் மேல் கனமாக இருந்தது! தலா 48 ஆயிரம் ரூபாய் விலை கொண்ட ஒவ்வொரு தொகுப்பிலும், ஆயிரத்துக்கு மேற்பட்ட படங்கள் இடம் பெற்றிருந்தன.
* 1851-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி இவர் இறந்தார்.
* 1987-ஆம் ஆண்டு இவரது ஒரு முழுமையான தொகுப்பு, நியூயார்க்கில் உள்ள கிறிஸ்டின் ஏல மையத்தில் 9 கோடியே 60 லட்ச ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது!
* இவரை 'பறவை மனிதர்' என்று இவர் வாழ்ந்த காலத்தில் குறிப்பிட்டனர்.

இவர் யார்?

– டி.ஜான்பால்,
உ. எண் 1233, ஓசூர்

ஜான் ஜேம்ஸ் ஆடுபான்.
(John James Audubon)



பார்க்க அழகு; பட்டால் விஷம்!


கண்களோ, கைகளோ இல்லாத அதிசயமான உயிரினம் ஜெல்லி மீன். வழக்கத்தில் ஜெல்லி மீன் என்று சொன்னாலும், மீன்களுக்குரிய தோற்றம் இவற்றுக்கு இல்லை. குடை போன்ற தலைப் பகுதியும், நீண்ட வால் போன்ற பகுதியும் கொண்ட இவை, நீரோட்டத்தில் கலந்து பயணிக்கும். சுமார் 650 மில்லியன் வருடங்களாக, எல்லாக் கடல் பகுதிகளிலும் இவை வசிப்பதாக, ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

95 சதவிகிதம் நீர், நான்கு சதவிகிதம் உப்பு மற்றும் ஒரு சதவிகிதம் புரதத்தால் ஆன ஜெல்லி மீன்களில், சுமார் 200 வகைகள் காணப்படுகின்றன. நீலம், ஆரஞ்சு, மஞ்சள், சிவப்பு... என்று பல வண்ணங்களில் காணப்படும் ஜெல்லி மீன்களின் உடலில், சென்சர் போன்ற ஓர் உறுப்பு அமைந்துள்ளது. உணவைத் தேட உதவுபவை இவைதான்.

கடலில் மேலும், கீழும் செங்குத்தாகச் செல்லும் தன்மை கொண்ட இவற்றைக் கண்டால், கடலில் மூழ்கி வளங்களைத் தேடுபவர்கள் (divers) அஞ்சுவார்கள். காரணம், இந்த ஜெல்லி மீன் பட்டால், உடலில் அரிப்பு, வீக்கம் போன்ற ஒவ்வாமை ஏற்படுவதுதான். அதனால், இந்தியர்கள் இதை உணவாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால், ஜப்பானியர்கள் இதைச் சுத்தம் செய்து உணவில் பயன்படுத்துகின்றனர்.

உலகின் மிகக் கடுமையான விஷத்

தாக்குதலை ஏற்படுத்துபவை என்று பட்டியலிட்டால், அதில் ஜெல்லி மீனும் உண்டு. ஆஸ்திரேலியக் கடற்பகுதியில் காணப்படும் பாக்ஸ் ஜெல்லி ஃபிஷ் (Box jelly fishy)



என்னும் chironex flekeri, இவற்றில் முதன்மையானது. இதன் விஷத் தன்மை ராஜநாகத்தின் விஷத்தை விடக் கடுமை யானது. அதாவது, ஒரு நிமிடத்தில் ஆளை வீழ்த்தக் கூடியது என்கிறார்கள். மற்ற ஜெல்லி மீன்களுக்கும் இதற்கும் உள்ள முக்கிய வேறுபாடு, இதற்கு கண் உண்டு என்பதுதான். விஷத்தன்மை கொண்ட இவற்றையும் வௌவால் மீன், முயல்மீன், சில நண்டுகள் மற்றும் ஆமைகள் உணவாகக் கொள்கின்றன என்பது வியப்பு!

பார்ப்பதற்குக் கடல் தாவரம் போன்றே காணப்படும் இந்த ஜெல்லி



மீன்கள், சமீபத்தில் ஜப்பான் மற்றும் கொரியா கடற்பகுதிகளில் மிகப் பெருமளவில் காணப்பட்டன. ஏன் என்று ஆராய்ந்தபோது, ஏற்றுமதிக் காகவும், உணவுக்காகவும் பெருமளவில் பிற மீன்கள் பிடிக்கப்பட்டதால் என்று புரிந்தது. ஆம்; பெரும்பாலும் ஜெல்லி மீன்களை உணவாகக் கொள்ளும் பிற மீன்களின் எண்ணிக்கை குறைந்து விட் டதால் விளைந்தது இது! இயற்கையின் சமச்சீர் சுழற்சியில் குறுக்கிடுவது, எவ் வளவு தவறு என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்!

- பெ.ராமன், உ. எண் 1381,
காஞ்சிபுரம்



* கைலாயம்



* அங்கோர் வாட்

60 குட்டிகள்!



* கிராஃபேர்ட் லாங்



* எட்வர்ட் டெல்

* ஒருவரைப் பிரியும்போது கூறப்படுவது Good-Bye. 'குட்-பை' என்றால் God be with you. 'கடவுள் உங்களோடு துணை இருக்கட்டும் என்று பொருள்.
* சீனாவில், கி.பி. பதினொராம் நூற்றாண்டில்தான் முதன் முதலில் குடையைப் பயன்படுத்தினர்.

- எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை

* திபெத் நாட்டில் 22,028 அடி உயரத்தில் கைலாய மலையுள்ளது. இந்த மலையின் சுற்றளவு 32 மைல்களாகும்.
* கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட் (Angkor wat) கோவில்தான் உலகிலேயே மிகப் பெரிய இந்து ஆலயம். அதன் பரப்பளவு 402 ஏக்கர்.
* உலகப் படங்களை வரைந்து தயாரிக்கும் கலைத்திறன் கார்ட்டோகிராபி (cartography) என அழைக்கப்படுகிறது.
* 1937ல் பம்பாய்க்கும் டில்லிக்கும் ஓடிய எக்ஸ்பிரஸ் ரயிலில்தான் முதன் முதலாகக் குளிர்சாதனப் பெட்டி இணைக்கப்பட்டது.

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

* தாஜ்மகாலைக் கட்டி முடிக்க உஸ்தாது இசா என்னும் சிற்பிக்கு 22 ஆண்டுகள் ஆயின.
* மோனாலிசா ஓவியம் வரைய டாவின்சிக்கு 4 ஆண்டுகள் ஆயின.




✸ வால்ட் டிஸ்னி 13 ஆண்டுகள் முயற்சியில் கார்ட்டூன் படங்களைத் தயாரித்தார்.

– எஸ்.மேரிஜீனோ, உ. எண் 1322, பாலக்காடு

✸ இன்று மிக அதிகளவில் பயன்படுத்தப்படும் எலக்ட்ரிக் ஸ்டவ்வைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் ஹடாவே (William Hadaway).

✸ அனஸ்தீஸியா (anaesthesia) என்னும் மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர், டாக்டர் கிராஃபோர்டு லாங் (Crawford W. Long).



* புலிச்சுறா

✸ கம்ப்யூட்டரில் பயன்படுத்தப்படும் ஐசி.யைக் கண்டுபிடித்தவர் ராபர்ட் நாய்ஸ் (Robert Noyce). இவருக்கு, 'சிலிகன் பள்ளத்தாக்கின் மேயர்' என்ற சிறப்புப் பெயருண்டு.

✸ திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் ஃபிலிம் சுருளைக் கண்டுபிடித்தவர், அமெரிக்கவைச் சேர்ந்த ஜார்ஜ் ஈஸ்ட்மென் (George Eastman).

✸ இன்டர்நெட்டில் 'com' என்ற சொல் பயன்படுத்தப்படுவதை நாம் அறிவோம். இது, component object model என்பதன் சுருக்கம்.

✸ ஹைட்ரஜன் குண்டைக் கண்டுபிடித்தவர் எட்வர்ட் டெல்லர் (Edward Teller). இவர் ஹங்கேரியில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர்.

✸ பிளாஸ்டிக்கால் ஆன செய்தித்தாளை முதன்முதலில் வெளியிட்ட நாடு, இத்தாலி.

✸ சுறா மீன்களில் ஒருவகை புலிச்சுறா (tiger shark). இது ஒரே சமயத்தில் அறுபது குட்டிகள் வரை ஈனும்!

-இரா.ரமேஷ், உ. எண். 1355, அரசு மேனிலைப்பள்ளி, காளப்பட்டி.

தீயிலே மலர்வது!



* எக்ஸ் ஆஸ்திரேலிஸ்

தமிழகத்தை ஒட்டியுள்ள மன்னார் வளைகுடாப் பகுதியில், அரிய கடல் தாவரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று, 'பெம்பிஸ் அசிடியூலா' (Pemphis acidula). இந்தத் தாவரம் சுமார் 11 அடி உயரம் வரை வளரும். இதன் மலர்கள் சற்றே அடர்சிவப்பு நிறத்தில் இருக்கும். தொலைவில் இருந்து பார்க்கும்போது, நெருப்பு எரிந்து கொண்டிருப்பது போன்று தோன்றும். இதைப் பயன்படுத்தி வாக்கிங் ஸ்டிக், சுற்று வேலிக்கான தூண்கள்... போன்றவற்றைத் தயாரிக்கின்றனர். அழுத்தமும், தாங்கு திறனும் கொண்ட இந்தத் தயாரிப்புகள், விலை மதிப்பு மிக்கவை.



* ராபிள்ஸியா

- ம.விவேக், குட்டம்

ஹவாய் (Hawai) தீவில் காணப்படும் ஒரு வகைப் பழங்களை, மலாய் ஆப்பிள் (malay apple) என்று சொல்கின்றனர். பழுக்கும் முன், இதன் செடிகளில் கண்ணைக் கவரும் சிவப்பு நிறத்தில் மலர்கள் பூக்கின்றன. நேரிடையாக, தண்டுப் பகுதியில் இருந்தே இந்த மலர்கள் பூக்கும். ஐரோப்பியரின் ஆதிக்கத்தில் இருந்தவரை, இந்தப் பழங்கள் உணவாகப் பயன்படும் என்பதை இங்கிருந்தவர்கள் அறியவே இல்லை. இன்று, இத்தீவின் முக்கிய உணவில், மலாய் ஆப்பிளும் ஒன்று.

ஆஸ்திரேலியாவில் காணப்படும் அதிசயமான மரம், எக்ஸ் ஆஸ்திரேலிஸ் (x australis). புல் இனத்தைச் சேர்ந்த

இந்தத் தாவரம், அதிவேகமாக வளரக் கூடியது. இதன் ஆச்சர்யமான தன்மை, தீப்பிடித்த பின்புதான், இது மலர்விட ஆரம்பிக்கும் என்பது. நட்சத்திர வடிவில் காணப்படும் இதன் மலர்கள், கிளைகளில் பூசியது போலப் பரவலாயிருக்கும். குங் குமச் சிமிழ் போல் தோன்றும் இதன் காய் வெடித்து, விதை பரவி, அதிலி ருந்து, அடுத்த மரம் தோன்றும்.

- எஸ்.சரஸ்வதி,
பெரிய காஞ்சிபுரம்





✽ மலாய் ஆப்பிள்

வெளியிடும்!

- எஸ்.தணிகைவேல்,
காஞ்சிபுரம்





✽ பெம்பிஸ் அசிடுலா


இந்தோனேஷியப் பகுதிகளில் காணப்படும் மலர் 'ராபிள்ஸியா'. Rafflesia arnoldii என்று சொல்லப்படும் இந்த மலர்தான் உலகி லேயே மிகப் பெரிய மலர். இதை விதைத்தோ, பதியம் வைத்தோ வளர்க்க முடியாது. ஒட்டுயிர் வகையைச் சேர்ந்தது இது. இந்த மலரில் உள்ள கிண்ணம் போன்ற பகுதியில் பத்து லிட்டர் தண்ணீர் கொள்ளும் என்றால், ஓரளவு இந்த மலரின் பரிமாணத்தை அறியலாம். மலர்ந்த ஓரிரு நாட்களி லேயே வாடி விடக்கூடிய இது, மலர்ந்த வுடன் கடுமை யான துர்நாற்றத்தை

''தாத்தா, ஒட்டகம் பாலை வனத்துல இருக்கும்னு சொன்னீங்களே. பாலைவனத்துல எப்படி அவ்வளவு மணல் வந்தது?''

குமரன் கேட்டதும், ஒரு வினாடி யோசித்தார் தாத்தா வேலாயுதம். கதை கேட்கும் மனநிலையில் இருக்கிறான் என்பது, அவன் தோற்றத்திலேயே தெரிந்தது. சிறிய பீடிகையுடன் ஆரம்பித்தார்.

''ஆரம்பத்துல கடவுள் பூமியைப் படைத்தபோது, பாலைவனமே இல்லை. எங்கே பார்த்தாலும் அடர்த்தியான காடுதான். எல்லாத் திசையும் பச்சைப் பசேல்னு இருக்கும். பழங்கள், காய்கள், தோட்டம்னு பூமியே ரொம்ப அழகா இருந்தது. மனிதன் ரொம்ப உற்சாகமா இருந்தான். ஒருநாள் அவனுக்கு விளையாட, குதிரையில் சவாரி செய்ய...மணல் பரப்பு இருந்தா நல்லா இருக்குமேன்னு தோணிச்சு. உடனே, கடவுளைக் கேட்டான். அப்ப கடவுள் சொன்னார்: 'இனிமே நீ செய்யற ஒவ்வொரு தவறுக்கும், வானத்தில் இருந்து ஒரு துளி மண் விழும்'. அதைக் கேட்ட மனிதன் உடனே சந்தோஷப் பட்டான். விலங்குகளைக் கொன்றான்; மண் விழுந்தது. மரங்களை வெட்டினான்; மண் விழுந்தது. இப்படி ஒவ்வொரு தப்பா செய்யச் செய்ய, வானத்திலிருந்து கொட்டின மணல்தான் பாலைவனமா ஆச்சு.''

தாத்தா சொல்லி முடித்ததும், குமரன் கேட்டான்: ''ஏன் தாத்தா, பாலைவனம் வரதுக்கு முன்னால, ஒட்டகம் எங்கே வாழ்ந்திருக்கும்?''. தாத்தா யோசிக்க ஆரம்பித்தார்.



- எஸ்.விக்னேஷ்,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்,
கோவை

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது அட்டையில்!

1701. அ.அம்மார், ஒன்பதாம் வகுப்பு, முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி, வடகரை
1702. ம.குருராகவ், ஆறாம் வகுப்பு, விஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, தருமபுரி
1703. கே.ஜெயகலைவாணி, ஒன்பதாம் வகுப்பு, மரியா நிவாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1704. அ.ஸ்ரீராம் விஜய், ஆறாம் வகுப்பு, க்ரீன் பார்க் இன்டர்நேஷனல் பள்ளி, நாமக்கல்
1705. ம.குணசேகவ், ஆறாம் வகுப்பு, விஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, தருமபுரி
1706. ஆர்.பாலாஜி, எட்டாம் வகுப்பு, மாக்தலின் மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி
1707. அமுதன், பத்தாம் வகுப்பு, டோன் போஸ்கோ பள்ளி, மும்பை
1708. மு.கமல்ராஜ், பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, புள்ளம்பாடி
1709. இர.நிறைமதி, ஐந்தாம் வகுப்பு, எய்ம்ஸ் சிபிஸ் இன்டர்நேஷனல், திருவண்ணா மலை



1710. சீ.ந.லோஷிகா, ஐந்தாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் நர்ஸரி பள்ளி, ஆரணி
1711. இரா. ஆகாஷ், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, புலிகுளம்
1712. ப. ரமேஷ், எட்டாம் வகுப்பு, அரசு மெட்ரிகுலேஷன் பள்ளி, சிதம்பரம்
1713. வி.திவ்யலக்ஷ்மி, ஒன்பதாம் வகுப்பு, செயின்ட் அனீஸ் பெண்கள் மெ. மேல்நிலைப் பள்ளி, கடலூர்
1714. எஸ்.பாலநித்தேஷ், ஏழாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி, கோவை
1715. வி.காயத்ரி, ஏழாம் வகுப்பு, யாகவா நடுநிலைப் பள்ளி, சின்ன காஞ்சிபுரம்
1716. பி.ஆர்.சுமித்ரா, ஏழாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
1717. எஸ்.மோகன ஆதித்யன், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் மெ. பள்ளி, திருவண்ணாமலை

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1718. அ.செ. செய்யது ஷாஹுல் ஹமீது, பதினொராம் வகுப்பு, ஓ.என்.ஜி.சி. பொதுப் பள்ளி, காரைக்கால்

1719. அ.ஷேக் உசேன், பத்தாம் வகுப்பு, முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி, வடகரை

1720. சீ. திரிபுரசுந்தரி, ஆறாம் வகுப்பு, புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, செங்கல்பட்டு

1721. ஸ்ரீவிஷ்ணு, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மே.நி. பள்ளி, சேலம்

1722. பி.சுவாதி, ஏழாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வேலூர்

1723. ம. ராஜசேகவன், பத்தாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, பிச்சம்பட்டி

1724. எஸ்.சந்தியா, ஒன்பதாம் வகுப்பு, செய்யது அம்மாள் மெட்ரிகுலேஷன் பள்ளி, இராமநாதபுரம்

1725. ம.பரத், ஐந்தாம் வகுப்பு, ஐயப்பா மேல்நிலைப் பள்ளி, சோழிங்கநல்லூர்

பெயரைச் சொல்; பரிசை வெல் - 5







1. ____________ 2. ____________ 3. ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....


வீட்டு முகவரி : ....

....பின்கோடு....................

போட்டி பரிசு ரூ.1000/-

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.8.2010



அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-32

கடிதமாலை



'இந்திரன் தோட்டம்' கட்டுரையைப் படித்து வியந்தேன். சிக்கிம் மாநிலத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இவ்வளவு இருக்கிறதா என்று பிரமிப்பு ஏற்பட்டது. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ✤ 'முள் மரம்' - என்னைப் போன்ற சிறுவர், சிறுமியர்களுக்கு ஆக்கபூர்வமான அறிவுரையை வழங்கியது. - **எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்** ✤ தேர்த்திருவிழா நெடுங்கவிதை முழுக்க விழாக் கண்ட மகிழ்ச்சியைத் தந்தது. - **எல.அரி பால்சுப்ரமணியம், திருக்களூர்** ✤ ஆதி மிகவும் புத்திசாலியாக மாறி வருவதால் கதை விறுவிறுப்பாகச் செல்கிறது. - **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை** ✤ 'உனக்கு எதில் விருப்பமோ அதில் ஈடுபட்டால் வெற்றி பெறுவாய்' என்ற கருத்தை தலையங்கம் எடுத்துரைத்தது. - **வீ.பெரியசாமி, தேரூர்** ✤ நமக்குச் சாதாரணமாகத் தெரிந்த விஷயம் என்றாலும் அதற்கு என்ன காரணம் என்பதை 'காரணம்' பகுதி நன்கு உணர்த்துகிறது. - **எம்.மிருணாளினி, உ. எண் 1567, மதுரை** ✤ ஜியோமெட்ரிபாக்ஸ் படிப்பினைக் கதையும் முள் மரம் அறிவுரைக் கதையும் மிகவும் அருமை. எளிய நடையில் புரியும்படி இருந்தது. - **ஏ.ஸ்ரீராம்விஜய், நாமக்கல்** ✤ அறிவியலின் கண்டுபிடிப்புகள் தருவது ஆக்கமா, அழிவா என்ற தலைப்பில் வெளியிட்ட பட்டிமன்றக் கருத்துக்கள் சிந்திக்க வைத்தன. - **ஆர்.பிருந்தா, மதுரை** ✤ சர்க்கரையைக் காட்டிலும் 300 மடங்கு இனிப்பும், மருத்துவ குணமும் உடைய 'ஸ்டீவியா' செய்தி புளகாங்கிதத்தை ஏற்படுத்தியது. - **இனாம் கேசவன், குருமலை** ✤ தந்திரநரிக்கும் தாவிக் குதிக்கும் குரங்கிற்கும் ஒரே நேரத்தில் அல்வா கொடுத்து அறிவு புகட்டிய ஆதிக்கே என் வோட்டு. - **ஆர்.ஏ.விஜய்சாய்பாலா, திருச்செந்தூர்** ✤ பிரார்த்தனை. சிறுகதை நெஞ்சைத் தொட்டது. - **இ.டி.ஹேமமாலினி, சென்னை** ✤ நேரத்தின் அருமையை உணர்த்திய 'திரும்ப வராதவை' கவிதை அருமை. - **சு.அபிஷேக், சென்னை** ✤ அனிமேஷன் அட்டகாசம் பிரமாதம். இந்தச் சிறிய வயதிலேயே இத்தனை திறமையா என்று வியக்க வைத்துவிட்டார் சிந்துஜா. - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்** ✤ 'கலகலா காலனி'யில் வெளியான நகைச்சுவைகளும் அருமை. கதைகள் அருமையோ, அருமை. - **சு.அபிஷேக், உ. எண் 518, சென்னை** ✤ அறிவுரைக் கதை, படிக்கும் எல்லோருக்குமே அவசியமான வாழ்க்கைத் தேவை! - **எஸ்.வினித் மாதவன், மதுரை** ✤ பள்ளி மாணவர்கள் பங்கேற்ற பட்டி மன்றமும், அந்த விஷயத்தை தங்களுக்கே உரிய விதத்தில் அழகாக வெளியிட்டதும் பாராட்டுக்குரியது - **வளர்மதி மனோதாஸ், கொட்டாரம்** ✤ உயர்த்தும் உற்சாகம் என்ற அட்வைஸ் வெரி நைஸ் - **ஆர்.ஜே. ஜெய்ஹரிதா, செல்வமருதூர்** ✤ 'பொம்மைக் கல்யாணம்' - அறிவியல் கதை அருமை. சோஃபியாவைப் போல், நானும் படித்து முன்னேறுவேன் - **சி.பிரதித், உ. எண் 1554, ஷிமோகா.**

கலை தேசம்!

இந்தியாவின் மிகச் சிறிய மாநிலம் கோவா. மேற்குக் கடற்கரை ஓரத்தில் கொங்கண் என்றழைக்கப்படும் பகுதியில் இது அமைந்துள்ளது. மேற்கே அரபிக் கடலும், மற்ற பக்கங்களில் கர்நாடகம் மற்றும் மராட்டிய மாநிலங்களும் சூழ்ந்துள்ளன.

பழங்கால இந்திய புராணங்களிலும், இலக்கியங்களிலும் இப்பகுதி கோமண்டா, கோமன்சலா, கோபகாட்டம் போன்ற பெயர்களாலும், மகாபாரதத்தில் 'இடையர்களின் நாடு' என்ற பொருள்படும்படி 'கோபராஷ்டிரா' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரேக்க ஆராய்ச்சியாளர் தாலமி, 'அபரந்தா' என்று சொல்கிறார்.



* டேக்னி நடனம்



* பாம் ஜீஸஸ் பாஸலிகா

இது, அசோகர் ஆண்ட மகதப் பேரரசின் ஒரு பகுதியாக மூன்றாம் நூற்றாண்டில் இருந்தது. தொடர்ந்து கார்வர்கள், சாதவாகனர்கள், போஜர்கள், சாளுக்கியர்கள் பிறகு போர்ச்சுகீசியர் என்று பலர் ஆட்சி செய்த பகுதி.

25வது மாநிலம்

1947ல் இந்தியா விடுதலை அடைந்தாலும் கோவா, போர்ச்சுகீசியர்கள் கட்டுப்பாடிலேயே தொடர்ந்து இருந்தது. 1961ல் இந்திய அரசின் ராணுவ நடவடிக்கையால் கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. பிறகு 1987ஆம் ஆண்டு கோவா மட்டும் தனியாகப் பிரிக்கப்பட்டு, இந்தியாவின் 25வது மாநிலம் ஆனது.

மர்ம கோவா!

சுமார் 3,700 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இந்த மாநிலத்தின் நிலப்பகுதி மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவையும், 'கொங்கண்' என்ற கடலோரப் பகுதியை

கௌதம் ராம்

யும் உள்ளடக்கியது. இங்கு கடற்கரையின் நீளம் 101 கி.மீ. மாண்டவி, சுஹாரி, சோப்ரா, சல், தொகோல் ஆகியவை முக்கிய நதிகள். சுஹாரி நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள மர்ம கோவா. தென் ஆசியாவின் மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று. பொதுவாக வெப்பமும், ஈரப்பதமும் கொண்ட பகுதி இது. டிசம்பர் மத்தியில் தொடங்கி பிப்ரவரி வரை குளிர் காலம். ஜூன் மாதத்தில் பருவ மழை பெய்யும்.



ஒண்ணும் ரெண்டும்!

வடக்கு கோவா, தெற்கு கோவா என இரண்டு மாவட்டங்களைக் கொண்ட மாநிலம் இது. பனாஜி, மர்மகோவா நகரங்கள் இவற்றின் தலை



* ஆஷா



* லதா

நகரங்களாக உள்ளன. நிர்வாக வசதிக்காக இவை 11 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தலைநகரம். பனாஜி. வாஸ்கோ, மர்கோவா, மாபூசா, போண்டா போன்றவை முக்கிய நகரங்கள்.

மாநில சட்டப் பேரவையில் மொத்தம் 40 இடங்கள். கோவா மாநிலத்திலிருந்து பாராளுமன்ற லோக் சபாவுக்கு இரண்டு எம்.பி.க்களும், ராஜ்ய சபாவுக்கு ஒரு எம்.பி.யும். தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மும்பை உயர்நீதி மன்றக் கிளை பனாஜியில் உள்ளது. தபோலிம், கோவாவின் ஒரே விமான நிலையம்.

எருமைக்கு மரியாதை!

கோவா மாநிலத்தின் அதிகாரபூர்வ விலங்கு : எருமை. பறவை : செங்கழுத்து மஞ்சள் 'புல் புல்' பறவை. நெல், முக்கியப் பயிர். இதைத் தவிர கேழ்வரகு. தேங்காய், முந்திரி, பாக்கு, கரும்பு, அன்னாசி, மாம்பழம், வாழை போன்றவையும் அதிக அளவில் விளைகின்றன. காடுகளில் தேக்கு போன்ற அரிய வகை மரங்களும் காணப்படுகின்றன. காணத்தக்க பல வனவிலங்கு சரணாலயங்களும், பறவைகள் சரணாலயங்களும் இங்கு உள்ளன.

வருவாய்

இந்தியாவுக்கு வரும் உலக சுற்றுலாப் பயணிகளில் 15 சதவிகிதம் பேர் கோவாவுக்கு வருகிறார்கள்.

சுற்றுலாவே மாநிலத்தின் முதல் வருமானம். அடுத்தது விவசாயம். அதையடுத்து மீன் பிடிக்கும் தொழில். இங்கு





* கார்னிவல் (திருவிழா)

உரத் தொழிற்சாலை, டயர் தொழிற்சாலை, காலணி மற்றும் ரசாயன உற்பத்தித் தொழிற்சாலைகள், மீன் பதப்படுத்தும் தொழிலகங்கள், நெசவு மையங்கள் போன்றவை உள்ளன.

சாலை வசதிகள் சரியில்லை என்பதால், பெரும்பாலும் இரண்டு சக்கர வாகனங்களையே அதிகம் பயன்படுத்துகிறார்கள். 'பைலட்ஸ்' எனப்படும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் பின் சீட்டில் ஒரு பயணியை ஏற்றிக்கொண்டு, செல்ல வேண்டிய இடங்களுக்கு வாடகைக்கு அழைத்துச் செல்லும் சேவை இங்குண்டு. மும்பைக்கும், கோவாவுக்கும் இடையில் நீராவிப் படகுகளும் இயக்குப்படுகின்றன.

மக்கள் தொகை!

மக்கள் தொகை 13 லட்சத்து 47 ஆயிரம். 1000 ஆண்களுக்கு 960 பெண்கள் என்ற விகிதத்தில் மக்கள் தொகை உள்ளது. 82 சதவிகிதம் பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.


சுற்றுலா


கோவாவின் கடற்கரைகள் இயற்கை அழகு மிகுந்தவை. பாகா, அஞ்சுனா, கோல்வா போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'பாம் ஜீசஸ் பாஸலிகா' தேவாலயம் உலகப் புகழ் பெற்றது. இங்கு புனித பிரான்சிஸ் சேவியரின் உடல் பல்லாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. போர்ச்சுகீசிய கட்டடக் கலைக்கு சான்றாக பல கோட்டைகளும், மாளிகைகளும் இங்கு இருக்கின்றன. மாநில மியூசியம், அறிவியல் மையம் போன்றவை காண வேண்டிய இடங்கள்.

கலாசாரம்

இங்கு பல்வேறு மத, இன கலாசாரங்களின் ஒருங்கிணைப்பாக ஆண்டுதோறும் 'சிக்மோ மெல்' என்ற இசை நடன விழா நடைபெறுகிறது. இந்த விழாச் சமயத்தில் தீபம், சிலுவை, பொய்க்கால் குதிரைகள் முன்செல்ல, ரதம் பின் தொடர, மேற்கத்திய மற்றும் உள்ளூர் நடனங்களும் நடைபெறும்.

மாண்டோ, டல்பாட் இரண்டும் கோவாவின் பாரம்பரிய இசை வடிவங்கள். டேக்னி, பக்டி, கொரிடிங்கோ ஆகியவை கோவாவின் பாரம்பரிய நடனங்கள். லதா மங்கேஷ்கர், ஆஷா போன்ஸ்லே ஆகிய புகழ்பெற்ற பாடகிகள் கோவாவில் பிறந்தவர்களே! கால்பந்து மிகப் பிரபலமான விளையாட்டு!


அதீ
கதை, படம் : பிள்ளை
என்ன இருந்தாலும் நம்ம அளவுக்கு யாருக்குமே முன் யோசனை வராது. நீ பெரிய ஆளுடா!
என்ன யோசனை? என் வீட்டைப் பாருங்க. புரியும்.
மழையோ வெயிலோ, இனி கவலையே இல்லை!
எப்படி நம்ம ஐடியா!
அட! சுண்டு. அசந்து போகப் போறான்.
என்ன? ஆச்சர்யமா இருக்கா? ரொம்ப சாதாரணம் எனக்கு!


என்ன ஆதி இது? இந்த நேரத்துல போய் இப்படி செய்திருக்கே?
ஏன்டா உனக்கிந்தப் பொறாமை? என்ன இந்த நேரத்துக்கு?
எனக்கேன் பொறாமை? நல்லது சொன்னா புரியாதே உனக்கு!
சரி; குடையோட கைப்பிடில உட்காராம இரு; ஆபத்தில்லை.
என்ன சொல்றான்!
சற்று நேரத்தில்...
அட சட்! இதென்ன பலமா காத்தடிக்குது!
ஆ... சுண்டு இதைத்தான் சொன்னானா? தெளிவாச் சொல்லக் கூடாதா! ஆடிக் காத்துல அகப்பட்டியேடா ஆதி...!





'விண்நோய்'க்கு

இரவு நேர வானத்தில் பளிச்சிடும் நட்சத்திரக் கூட்டத்தைப் பார்க்கிறோம். இந்த நட்சத்திரம் எப்படித் தோன்றுகிறது? முதலில் வாயுவும் தூசுத் துகள்களும் ஒன்றோடொன்று இணைகின்றன. ஒன்றிணைந்த இந்த நிறை, இறுக்கமான பிணைப்பாக உருமாறுகின்றது. அதில் வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கிறது. உள்ளிருக்கும் வெப்பம் ஒரு மில்லியன் டிகிரி செல்சியஸுக்கு மேலே கடந்துவிடும். இந்த வெப்பநிலையில் ஹைட்டிரஜன் வாயுவில் உள்ள அணுக்கள் ஒருங்கிணைந்து ஹீலியம் வாயுவாக உருவாகும். இவ்வாறு நடக்கும்போது, இந்த நிறை, அதிகப்படியான சக்தி, வெப்பத்தை வெளியேற்றும். அப்போது, வாயுவின் நிறையும் தூசும் இணைந்து ஒளிரத் தொடங்கும். இதுவே நட்சத்திரம்.

வெயிட் பார்ட்டி?

விண்வெளிக் கப்பலில் பயணம் போகும்போது எப்படி இருக்கும் தெரியுமா? அதில் செல்பவர்கள் இடுப்பில் பெல்ட் அணிந்து உட்கார்ந்திருப்பார்கள். '5, 4, 3, 2, 1 ஸ்டார்ட்' என கவுன்டவுன் தொடங்கும். ராக்கெட் எரிந்து பறக்கத் தொடங்கியவுடன், விண்வெளிக் கப்பலில் இருந்து இருக்கையோடு யாரோ தள்ளிவிடுவது போன்ற உணர்வு ஏற்படும். இதைத்தான் 'புவியீர்ப்புச் சக்தி' என்பர். இந்த நேரத்தில் உடலின் எடை மூன்று மடங்கு அதிகரித்தது போன்ற உணர்வு ஏற்படும். இந்த உணர்வு எப்படி இருக்கும் தெரியுமா? லிஃப்டில் ஏறினவுடனே, அது மேலே போகும்போது எப்படியிருக்குமோ, அதே மாதிரி. குறிப்பிட்ட உயரத்தைக் கடந்து, வட்டப் பாதைக்குள் சென்றுவிட்டால், புவியீர்ப்புச் சக்தி இல்லாமல் போகும்,







மருந்து!

அப்போது எடையற்ற நிலை ஏற்படும். எவ்வளவு 'வெயிட் பார்ட்டி'யா இருந்தாலும், விண்வெளில 'வெயிட்லெஸ்' தான்!

உடற்பயிற்சி அவசியம்!

விண்வெளிக்குள் பயணம் போனாலும் உடற்பயிற்சி அவசியம். ஏன் தெரியுமா? விண்வெளிக்குப் போன வீரர்களுக்கு 'விண் நோய்' வருகின்றதாம். அது என்ன? விண்வெளியில் உடல் எடையற்ற நிலையை அடைவதால், விண்வெளிச்சூழலை ஏற்றுக்கொள்ள அது ஒத்துழைப்பதில்லை. இது சரியாவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தேவைப்படும். இருந்தாலும், நீண்ட நாள் விண்வெளிப் பயணம் என்றால், விண் நோயிலிருந்து தப்பிப்பது கடினம்தான். ஏனென்றால், உடலின் தசைகள் வலுவற்றதாக மாறத் தொடங்கி விடும். இதைத் தடுப்பதற்காகத்தான் விண்வெளிக்குச் சென்றும் வீரர்கள் உடற்பயிற்சி செய்கின்றனர். விண்வெளிக் கப்பலில் 'டிரெட் மில்' போன்ற பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். அட, விண்ணுக்குப் போனாலும் உடற்பயிற்சி விடாது போலிருக்கே! ●

முனைவர் ஆசுரா



"குருவாய் வாழ்வேன்!"

- வளர்கவி, கோவை

அரசர் தோட்ட மாமரங்கள்
அற்புதக் கனிகள் தந்திடுமாம்
திருடர் நெருங்க முடியாமல்
தீவிரக் காவல் வைத்தானாம்!

இருந்தும் பழங்கள் களவாக
'இதனைக் கண்டறி' என்றே தன்
அருமை மகனைப் பணித்தானாம்
அவனும் காவல் இருந்தானாம்!

கம்போ கழியோ இல்லாமல்
கள்வன் ஒருவன் மாங்கனியை
கண்ணால் பார்த்தே இழுத்தானாம்
காற்றில் பழங்கள் மறைந்தனவாம்!

வியந்தான் மைந்தன்; என்றாலும்
வளைத்துப் பிடித்தான்; திருடியவன்
பயந்தான்; மன்னன் 'கொல்க'என
பகர்வான் ஆணை என்றெண்ணி!

அதுதான் நிகழ்ந்தது; ஆனாலும்
''அரசே! அரிய கலையதனை
முதலில் கற்போம்; பிறபின்பு.''
முடிவாய்ச் சொன்னான் இளவரசன்.

அரியா சனத்தில் அமர்ந்தபடி
அரசர் கள்வனைக் கீழமர்த்தி
தெரியாக் கலையைக் கற்பதற்குத்
தீவிரமாக முயற்சித்தார்!

என்ன முயன்றும் கலைமட்டும்
மன்னர் மனதில் பதியவில்லை!

சீரிய மகனோ சிந்தித்தான்
சிக்கல் தீர வழிசொன்னான்:

''கலையைக் கற்றுத் தருகின்ற
கள்வன் குருவின் இணையன்றோ?
அவனை மேலே அமர்த்திவிட்டு
அரசர் கீழே அமரட்டும்!''

என்றே மகனும் எடுத்துரைக்க
ஏற்றுக் கொண்டார் மாமன்னர்.
இருகை கட்டிப் பணிவாக
குருமுன் அமர்ந்து கொண்டாராம்!

கலையும் எளிதாய்க் கைகூட
காவலன் உள்ளம் மகிழ்ந்தாராம்
'விலையே இல்லா வித்தை'யென
உவகை பொங்கச் சொன்னாராம்!

'கள்வன் சிரசைச் சீவு!'எனக்
கர்ஜனை செய்தான் இளவரசன்!
''கள்வன் எனினும் குருவாகி
கற்றுத் தந்தான் கலை; மைந்தா!

கொல்லேன் குருவை'' எனச்சொல்லி
கள்வனை மன்னர் விடுவித்தார்!
நல்லறி வெய்திய கள்வன், மனம்
நெகிழச் சொன்னான், விழிபொங்க:

'அற்புதக் கலையை அறிந்தாலும்
அதனை வீணாய்ச் செலவிட்டேன்.
குற்றம் புரியேன்; இனியென்றும்
குருவாய் வாழ்வேன்' ஈதுண்மை!''

உலகக்கோப்பை கால்பந்துப் போட்டியில் வீரர்களுக்கு இணையாகப் பேசப்பட்டது, ஆக்டோபஸ் 'பால்'. அதன் அத்தனைக் கணிப்புகளும் சரியாக இருந்ததால், ஆக்டோபஸின் அடுத்தடுத்த ஜோசியத்துக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிதாக எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், 'இனிமேல் ஆக்டோபஸை ஜோசியம் சொல்வதற்குப் பயன்படுத்தமாட்டோம்' என்று அதனை வளர்க்கும் விலங்கியல் பூங்காவின் நிர்வாகம் சொல்லிவிட்டது. என்ன ஆனாலும், பால் ஆக்டோபஸ் ஏற்கெனவே வரலாற்றில் இடம்பிடித்துவிட்டது!



* நடால்



* செரீனா





* ரோஜர் பெடரர்

அடுத்த கால்பந்து உலகக்கோப்பை போட்டி பிரேஸிலில் நடக்கிறது. கால்பந்தை கலையுணர்வோடு ஆடுகிறவர்கள் பிரேஸில் வீரர்கள். இந்த உலகக் கோப்பையில் பிரேஸில் அணி கால் இறுதியோடு வெளியேறிவிட்டதால், தங்கள் நாட்டு ரசிகர்களை மகிழ்விக்க அடுத்த உலகக்கோப்பைப் போட்டியில் அவர்கள் மிகக் கடுமையாகப் போராடுவார்கள் என்று நம்பலாம்.

விம்பிள்டன் போட்டியை வென்ற நடால் மீண்டும் முதல்

இடத்தைப் பிடித்துள்ளார். 24 வயதுக்குள் எட்டு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார் நடால். இந்த அளவில் சென்றால் நிச்சயம் அவர் ஃபெடரரின் சாதனையை (16 கிராண்ட் ஸ்லாம்) மிஞ்சிவிடுவார் என்று விமரிசகர்கள் கூறுகிறார்கள்.

இந்தத் தடவை கால்பந்து உலகக் கோப்பையை வென்றது ஸ்பெயின். அதேபோல நடாலும் ஃபெடரரைத் தாண்டி டென்னிஸ் உலகில் ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டு ஸ்பெயின் ரசிகர்கள் மிகவும் மகிழ்ந்து போயிருக்கிறார்கள். ஸ்பெயினுக்கு இது பொற்காலம்.

சாம்பியன்ஸ்





✱ மார்ட்டினா



✱ ஸ்டெஃபி



✱ செலஸ்

மார்ட்டினா நவரத்திலோவா, ஸ்டெஃபி கிராப், மோனிகா செலஸ் வரிசையில் இப்போது சமீபத்தில் விம்பிள்டன் வென்ற செரினா வில்லியம்ஸின் பெயரும் இணைத்துப் பேசப்படுகிறது. இதுவரை 13 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார் செரினா. நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்ற ஐந்தாவது டென்னிஸ் வீராங்கனை ஆகியுள்ளார். ஸ்டெஃபி கிராப் இதுவரை 22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார். 'அந்தச் சாதனையை இலக்காக வைத்துக்கொள்கிறேன்' என்கிறார் செரீனா!

ஆஸ்திரேலிய கிரிக்கெட்டில் இப்போது ஒருநாள் போட்டிகளை 40 ஓவராகக் குறைத்துவிட்டார்கள். அந்த 40 ஓவரையும் இரண்டு முறை பகுத்து ஆடிக்கொள்ளலாம். டெஸ்ட் போட்டி போல ஒருநாள் போட்டிகள் நடத்தப்பட்டால் ரசிகர்கள் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் செலுத்துவார்கள் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் நம்புகிறது.

ச.ந.கண்ணன்



'பல்'லி மீன்!

கடலின் ஆழமான பகுதிகளில் காணப்படும் அரிய மீன் இனம் பல்லி மீன். இவற்றிலும் அறுபதுக்கு மேற்பட்ட வகைகள் உண்டு. ஆங்கிலத்தில் Lizardfish என்றும், Synodus Intermedius என்றும் சொல்லப்படும் இந்த மீன், சுமார் அறுபது செ.மீ. நீளம் வரை வளரும். கடலில் நானூறு அடி முதல் 1300 அடி ஆழத்திலும் வசிக்கக் கூடியது. பெரும்பாலும் அடிமணல் பரப்பிலும், கடற்புல் மிகுந்த பகுதிகளிலும் இவை வசிக்கும்.

உருளைபோன்ற உடலமைப்புடைய இந்த மீனுக்கு, வாயில் கூர்மையான முட்களைப் போன்ற பற்கள் காணப்படும். நாக்குப் பகுதியிலும் பற்கள் உண்டு என்பது விந்தைதான். இந்தோனேசியா, ஜப்பான், மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா உட்பட உலகெங்கும் பரவலாகக் காணப்படுகின்றன.

தனக்கு ஆபத்து நெருங்குவதை அறிவதிலும், மீனவர்கள் வீசும் வலைகளில் சிக்காமல் தப்புவதிலும் இந்த மீனுக்கு சாமர்த்தியம் அதிகம். பல்லி போன்ற முக அமைப்புடன் காணப்படுவதால், பல்லி மீன் எனப்படும் இந்த மீனினம், தமிழகத்தின் கரையை ஒட்டிய மன்னார் வளைகுடாப் பகுதியிலும் உண்டு.

மன்னர் வளைகுடா என்பது, இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும், இலங்கையின் மேற்குக் கரைக்கும் இடைப்பட்ட சுமார் 200 கி.மீ. நீளத்தைக் கொண்டது. தமிழகத்தின் தாமிரபரணியும் இலங்கையின் 'மல்வத்து ஆறு'ம் இந்த மன்னார்குடாவில் தான் கலக்கின்றன.

இந்தப் பகுதியை கடல்சார் தேசியப் பூங்காவாக அறிவித்துள்ளது அரசு. அதன் பயனாக, 'இந்தப் பகுதியில் பவளப் பாறைகளின் வளர்ச்சி அதிகரித்திருக்கின்றன' என்கிறார்கள்.

'மன்னார்குடாப் பகுதியில் உள்ள 21 தீவுகளுக்குச் செல்லவோ, மீன் பிடிக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளதும் காரணம்' என்றும் சொல்கிறார்கள். தவிர, மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் கடலில் கடல் சார் தேசியப் பூங்காவின் எல்லையை அறிந்து கொள்ள, ராட்சத மிதவைப் பந்துகளை (போயா) மிதக்கவிடவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள். 'இதனால், கடல் வளம் பாதுகாக்கப்படுவதுடன், கடல் சார் உயிரினங்களும் காப்பாற்றப்படும்' என்கிறார்கள் அதிகாரிகள். முதல் கட்டமாக, தூத்துக்குடி அருகிலுள்ள வான்தீவு, விலாங்கு சல்லி உள்ளிட்ட நான்கு தீவுகளில் இந்த மிதவைகள் அமைக்கப்படுகின்றன.

அரிய கடல்வாழ் உயிரினமான 'பல்லி மீன்'களைப் பாதுகாப்பதும், நம் கடமை என்பதில் அக்கறை ஏற்பட்டிருப்பது நல்லது.

– ராம்


ஆபத்து நெருங்குவதை அறிவதிலும், மீனவர்கள் வீசும் வலைகளில்
சிக்காமல் தப்புவதிலும், இந்தப் பல்லிமீனுக்கு சாமர்த்தியம் அதிகம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

